1-8-55

835

கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

835
2-55
REGISTRAR OF BOOKS
AUG 1955
MADRAS

2 அணா

செய்திகள்

குழந்தை இலக்கியக் கழகம்

இந்தக் கழகத்தின் 5 - ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 17 - 7 - 55 அன்று நடைபெற்றது. கீழ்க்கண்டவர்கள் புது நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பூவண்ணன் - தலைவர், ஜெ. எத்திராஜன் - செயலாளர், புவனை கலைச் செழியன் - துணைச் செயலாளர், இரா. முத்து - பொருளாளர். மற்றும் ஐந்து நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஆண்டு கழகத்தின் சார்பில் சிறுவருக்கென சிறந்த கதைப் புத்தகங்களைக் குறைந்த விலையில் வெளியிடுவதென்றும், சில போட்டிகள் நடத்திப் பரிசளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது.

அபூர்வ நாலணுத் தபால் தலை

தபால் தலை சேகரிப்பது பற்பல நாடுகளிலும் உற்சாகமான வழக்கமாகி விட்டது. அபூர்வமான தபால் தலைகளை வைத்திருப்பவர்களுக்கு அதிருஷ்டமும் அடித்துவிடுகிறது. சமீபத்தில் லண்டனில் ஒரு நாலணுத் தலை என்ன விலைக்குப் போயிற்று, தெரியுமா? 728 பவுன்களுக்கு அந்த ஒரு தலை விற்பனையாயிற்று. அந்த நாலணுத் தலை இந்தியத் தபால் தலை ஆகும். 1854 - இல் பிரசுரமானது. இதில் விக்டோரியா ராணியின் தலை தலைகீழாக அச்சிடப்பட்டிருந்தது. இதை நியூஜீலந்தைச் சேர்ந்த ஒருத்தி தன் தொகுதியில் சேகரித்து வைத்திருந்தாள்.

ஹிந்த் கோக்

ஆப்கானிஸ்தானத்துக்குக் குறுக்கே செல்வது ஹிந்துகுஷ் என்ற பிரசித்தி பெற்ற மலை. இதைத்தான் இனி ஹிந்த் கோக் என்று அழைக்க வேண்டும் என்று அந்த நாட்டுச் சர்க்கார் மாற்றி யிருக்கிறார்கள். பாரஸீக மொழியில் 'குஷ்' என்றால் 'கொல்வது' என்று பொருளாம். 'கோக்' என்றால் 'மலை' என்று பொருளாம்.

அசோகரின் பொன்மொழிகள்

டில்லியில் உள்ள நந்தவனங்களில் அமைக்கப் பட்டிருக்கும் கல்தூண்களில் அசோக சக்ரவர்த்தியின் பொன்மொழிகளைச் செதுக்கிவைக்கும்படி பண்டித நேரு யோசனை கூறியிருக்கிறார்.

நால்வர் மகாநாடு

நீடித்த உலக சமாதானத்துக்கு ஒரு வழி காண்பதற்காக உலகின் நான்கு பெரு வல்லரசுகள் ஜினீவாவில் கூடினார்கள். அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர், ரஷ்யப் பிரதமர் புல்கானின், பிரிட்டிஷ் பிரதமர் அந்தோனி ஈடன், பிரெஞ்சுப் பிரதமர் எட்கர் பாவ்ரே ஆகிய நால்வருமே அந்த வல்லரசுகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள். மகாநாடு வெற்றிகரமாக முடிந்தது என்று அனைவரும் நம்புகிறார்கள்.

ஸ்ரீ காமராஜ் பிறந்த தினம்

சென்னை முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் நாடாரின் 52 - ஆவது பிறந்த தினத்தைத் தமிழ் நாட்டின் பல ஊர்களில் கொண்டாடினார்கள். கர்ம வீரர் காமராஜ் என்று அவரைச் சென்னைச் சட்டசபை சபாநாயகர் சிவஷண்முகம் பிள்ளை பாராட்டினார்.

பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 15

1-8-'55

குழந்தைகளே!	பக்கம்	2
குண்டுச் சீமா	..	3
தேர்தல்	..	9
உண்மையைச் சொன்னல்..		13
ஏழு கோபுரப் புதையல்	..	19
பாசம்	..	24
கேளுங்கள் சொல்கிறேன்	..	29
கவியரங்கம்	..	32
பாரஸீக ரோஜா	..	33
லீடர் மணி	..	35
கண்ணன் நிருபர்கள்	..	40
செய்திகள் - 2 - அட்டை		
பேனு நண்பர்கள் - 3 - அட்டை		
அதிருஷ்ட எண்கள்		

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

1-7-55

அதிருஷ்ட எண்கள்

முதற் பரிசு		..	12262
2-ஆம் பரிசு		..	8132
3-ஆம் பரிசு	1.	..	409
	2.	..	4737
	3.	..	10816
4-ஆம் பரிசு	1.	..	95[illegible]4
	2.	..	5051
	3.	..	7954
	4.	..	4743
	5.	..	6133

ஜூலை 1-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்கு மேல் அனுப்பினுல் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

குழந்தைகளே!

கண்ணன் தொடர்கதைப் போட்டி இந்த ஜூலை 31 - ஆம் தேதியோடு முடிவடைகிறது. இவற்றைப் பரிசீலனை செய்து விரைவில் முடிவு அறிவிக்கப்படும். இது விஷயமாக எந்தவிதக் கடிதப் போக்கு வரத்தும் வைத்துக்கொள்ளப்பட மாட்டாது.

இந்த இதழில் மேலும் சில கண்ணன் நிருபர்களின் பெயர்களை வெளியிட்டிருக்கிறோம். இந்த நிருபர்கள் எல்லாரும் ஆகஸ்ட் 15 - ஆம் தேதி முதல் செயல்படுவார்கள். இப்பொழுதே பல நிருபர்கள் தங்கள் தங்கள் ஊர்ச் செய்திகளை எழுதியனுப்பி யிருக்கிறார்கள். எல்லாம் தினசரிப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் போல் இருக்கின்றன. வெறும் பொதுக்கூட்டத்தைப்பற்றியும், தலைவர்கள் விஜயம் செய்து - புறப்பட்டுப் போனது பற்றியுமே எழுதியனுப்பி யிருக்கிறார்கள். கண்ணன் நிருபர்கள் மற்ற ஊர் மாணவ மாணவிகளுக்குப் பயன்படும் விஷயங்களையும், அவர்கள் விரும்பிப் படிக்கக்கூடிய செய்திகளையுமே தர முயலவேண்டும். 'ஒரு கிழவி மோட்டார் லாரியில் அடிபட்டு இறந்தாள். ஒரு தற்கொலை' - இந்த மாதிரிச் செய்திகளையெல்லாம் அனுப்பக்கூடாது. முன்பே அறிவித்திருக்கிறபடி விளையாட்டுப் போட்டிகளைப்பற்றி எழுதலாம்; விசேஷ நிகழ்ச்சிகளைப்பற்றிச் சுவைபட எழுதலாம்; பள்ளி நிகழ்ச்சிகளை எழுதலாம்; திருவிழாவைப் பற்றித் தித்திக்கத் தித்திக்க எழுதலாம். பொது நலப் பணிகளைப்பற்றி எழுதலாம்; இயற்கை விந்தைகளைப்பற்றி எழுதலாம். தங்களால் எழுத முடியாவிட்டால் தங்கள் ஊரில் உள்ள வேறு குழந்தைகள் எழுதுவதை வாங்கியும் அனுப்பலாம். பெண்கள் கூட நிருபர்களாக ஆகலாம். இதற்கு ஒரு தடையும் இல்லை. பொதுவாக நீங்கள் எழுதியனுப்பும் விஷயம் உங்களுக்கே முதலில் சுவாரஸ்யமாக இருக்கிறதா என்று படித்துப் பார்த்துவிட்டு, எனக்கு அனுப்புங்கள்.

நீங்கள் எழுதும் விஷயங்கள் நன்றாக இருந்தால் கண்ணனில் உடனுக்குடன் பிரசுரமாகிவிடும். பிரசுரமாகாதுபோனால் அதற்காகக் கவலைப்பட்டுக்கொண்டு இராமல் வேறு விஷயங்களைப்பற்றி எழுதியனுப்பவேண்டும்.

கண்ணனில் மேலும் சில மாறுதல்கள் செய்ய உத்தேசித்திருக்கிறோம். சில புதுப் பகுதிகளின் தலைப்பில் உங்களுக்கு உபயோகமானதும், நீங்கள் நன்றாக ரஸிக்கக் கூடியதுமான விஷயங்களைத் தர எண்ணியிருக்கிறோம். இத்தகைய பகுதிகள் விரைவில் அறிமுகப் படுத்தப்படும்.

பாலர் கவியரங்கத்துக்கு ஏராளமாகப் பாடல்கள் வருகின்றன. இளங் கவிகள் இத்தனை பேர் இருக்கிறார்களா என்று மலைப்புத் தட்டுகிறது. ஆனால் சிலர் கதைகள் விஷயத்தில் நடந்து கொள்வது போலவே இதிலும் செய்து விடுகிறார்கள். அதாவது வேறு ஒருவர் எழுதிய கவிதைகளை எடுத்து, தம் பெயரிட்டு எழுதியனுப்பி விடுகிறார்கள். இதை நீங்கள் செய்ய வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன். பாட்டு மட்டமானதாக இருந்தாலும் சின்னதாக இருந்தாலும் சொந்தமானதாக இருந்தால்தான் உங்களுக்குப் பெருமை; உங்களைச் சேர்ந்தவர்களுக்கும் பெருமை. எனக்கும் அதுதான் பெருமை தருவதாகும். கூடுமான வரையில் எளிய கவிதைகளே எழுதப் பழகுங்கள். பொருள் புரியா விஷயத்தை வைத்து எழுத முற்படாதீர்கள். குழந்தைகள் பெயரில் சில பெரியவர்கள் எழுதிவிடுகிறார்கள். இதுவும் தவறு. குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்து எழுதப் பழக்கினால் எவ்வளவு நல்லது!

— ஆசிரியர்

குண்டுச் சீமா

ராஜி

7

கடைசியில் நான்தான் ஏமாந்தேன். நான் எதிர்பார்த்தபடி எனக்கு அடி உதை எதுவும் விழவில்லை. ஆனால் அப்பா மனம் நொந்துகொண்டு, ''சீமா, நீ சொல்லுவதை இனிமேல் நான் நம்பப் போவதில்லை. இருக்கட்டும். இதோ வருகிறேன்'' என்று என் பாட்டியைப் பார்த்தார். ''அம்மா, இந்த யானையை நாம் வச்சிண்டு என்ன பண்றது? நானே போய் இந்த யானையைக் கோவிலுக்கு இனாமாகக் கொடுத்துட்டு வருகிறேன்'' என்றார்.

உடனே நான், ''இனிமேல் போட்டிப் பந்தயப் பக்கம் போகவே, போகலே!'' என்று கத்தினேன்.

அப்பொழுது பாட்டியின் குரல் கேட்டது:

''என்னடா சீமா, மணி ஏழு ஆயிடுத்து. ஏதோ உளறிண்டே தூங்கறியே!'' என்று என்னை எழுப்பினாள். நான் திடுக்கிட்டு எழுந்தேன். கண்ணைத் துடைத்துக்கொண்டேன். அப்பொழுதுதான் நான் கண்டது அவ்வளவும் ஒரு சொப்பனம் என்று தெரிந்தது. வாசலில் பரிசு யானையையும் காணோம்; யானைப் பாகனையும் காணோம்! சந்தோஷங்கொண்டு பாட்டியிடம் நான் கண்ட சொப்பனத்தை அப்படியே சொன்னேன். உடனே பாட்டி என்னைக் கட்டிக்கொண்டு, ''சீமா, ராத்திரி உன்னை அப்பா 'போட்டிப் பந்தயத்துக்குப் போகாதே' என்று கோவிச்சுண்டானோ, இல்லையோ! நீ தூங்கப் போயிட்டே. அதான் நீ இப்படியெல்லாம் சொப்பனம் கண்டிருக்கே. நம்முடைய தெய்வம் பிள்ளையார் ஆனதாலே யானை ரூபத்தில் வந்து அவர், 'நீ அப்பாவுக்குத் தெரியாமெ ஏதாவது செய்தாயானால் உன் விஷயத்தை அம்பலப்படுத்தி விடுவேன்' என்று உனக்குப் புத்திமதி சொல்லி இருக்கிறார்!'' என்றாள்.

இந்தச் சொப்பன சமாசாரத்தை என் பாட்டி தாத்தாவுக்குச் சொல்ல. தாத்தா அப்பாவுக்குச் சொல்ல, அப்பா அம்மாவுக்குச் சொல்ல, வீட்டில் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. 'நல்ல சொப்பனம்டா இது!' என்று எல்லாரும் கேலியும் சிரிப்புமாகச் சொன்னார்கள்.

என் பாட்டியோ அப்பாவைக் கூப்பிட்டு, ''சொப்பனத்திலே சீமா யானையைப் பார்த்தான். நாம்ப மலைக்கோட்டைப் பிள்ளையார் கோவிலுக்கு வேண்டிண்டு போகவே இல்லையே. சீக்கிரம் போயிட்டு வந்தால் தேவலை!'' என்றாள்.

''இரண்டு மூன்று நாளிலே சாமா வறேன் என்று எழுதி இருக்கான். எல்லோருமா அங்கே போயிட்டு வரலாம்'' என்றார் என் அப்பா.

''சீமா, நீ சொப்பனங் கண்ட பிரதாபத்தை எல்லாரிடமும் சொல்லிண்டு திரியவேண்டாம். படிப்பைக் கவனி. இன்னிக்கு என்ன பரீக்ஷை?'' என்று கேட்டார் அப்பா.

''கணக்கு, பூகோளம்'' என்று பதில் சொன்னேன்.

''கணக்குலே பூகோளம்! அப்போ கணக்குலே சைபரா வாங்கப் போறே?''

''இல்லே அப்பா, காலையிலே கணக்குப் பரீக்ஷை. மாலேயிலே பூகோளம்.''

''அப்படியா, உனக்கு என்னியோடே பரீக்ஷை முடியறது?''

''நாளையோடே, அப்பா.''

''நாளைக்கு என்ன பரீக்ஷை?''

காலையிலே இங்கிலீஷ் பஸ்ட் பேப்பர். சாயங்காலம் இங்கிலீஷ் செகண்ட் பேப்பர். முதல்நாள் நடந்த பரீக்ஷையின் கேள்வித்தாள் வெளி வந்து விட்டது, அப்பா. அதற்காக இரண்டாம் தரம் வைக்கிறார்கள்.''

''இங்கிலீஷா? உனக்குத்தான் சரியாக அது வராதேடா. சரியாகப் படி. எப்போதும் டிக்ஷனரியை வைத்துக்கொள். சந்தேகம் வரும்போதெல்லாம் அதைப் பார்த்து அர்த்தத்தைத் தெரிஞ்சுக்கோ!'' என்று சொல்லி விட்டுப் போனார் அப்பா.

அன்று மாலே சரியாக ஆறு மணிக்கே என் அறைக்குப் போனேன்.

என் பின்னாலேயே வந்த பொல்லாத கிதா என்ன சொன்னாள் தெரியுமா? ''ஏன் அண்ணா, அன்னிக்கு ராத்திரி மாதிரி திருடன் கதையேதாவது படிக்கப்போறயா?'' என்றாள். படிக்க வந்தவனை ஒருத்தி இப்படிக் கேட்டால் எப்படி இருக்கும்? கோபம் கோபமாக வந்தது.

''இப்போது நீ இந்த இடத்தை விட்டுப் போகப் போகிறாயா, இல்லாட்டா அம்மாவைக் கூப்பிடட்டுமா?'' என்று விரட்டின பொழுது என் அம்மா கையில் ஒரு தூக்குக் கூடையுடன் அங்கே வந்தாள்.

''சீமா, இதோ பார்! இந்தப் பெரிய தர்மாஸ்பிளாஸ்கிலே சூடா நல்ல டீ வெச்சிருக்கேன். தூக்கம் வரும்போது டீயைக் கொஞ்சம் சூடாக் குடி. இன்னொரு பிளாஸ்கில் கொதிக்கக் கொதிக்க வெந்நீர் வெச்சிருக்கேன். ராத்திரி தாகமெடுத்துதுன்னா அதைக் குடி. கண் முழிச்சிண்டு பச்சைத் தண்ணியைக் குடிச்சா உடம்புக்கு ஆகாது. இரண்டு சோடா பாட்டிலும் வாங்கி வெச்சிருக்கேன். ராத்திரி உனக்கு ரொம்பக் களைப்பா இருந்தா இந்தக் கூடையில் சாத்துக்குடிப் பழம் இருக்கு. கத்தி, சக்கரை, பழம் பிழியும் கிளாஸ் எல்லாம் வெச்சிருக்கேன்.

வேணும்னு பிழிஞ்சு குடி. இல்லட்டா நான் தூங்கினாலும் என்னை எழுப்பு'' என்று சொல்லி விட்டு என் அறையை விட்டுச் சென்றாள். அப்பொழுது என் அறையையும் அங்கே வைத்திருந்த சாமான்களையும் பார்த்திருந்தால் உடம்பு குணமில்லாமல் படுத்திருக்கும் நோயாளியின் அறையைப்போல இருக்கும்.

நான் படிக்க ஆரம்பித்தேன். தீவிரமாகப் படித்தேன். பொழுது

விடிவதற்குள் அம்மா வைத்துச் சென்ற சாமான்களையெல்லாம் காலி செய்துவிட்டேன்.

பரீக்ஷை அன்று காலை எனக்குப் பல் தேய்க்கக்கூட அவகாசம் இல்லை. அவசரமாகக் குளித்தேன். சாப்பிடும் போதும் புஸ்தகத்தைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு படித்துக்கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் போகும் போதும், வழியில் ஒரு கையில் புஸ்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டே போனேன். என்னைப் போலவே மற்றப் பையன்களும் கையில் புஸ்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டேதான் இருந்தார்கள். மணி அடித்தது. புஸ்தகங்களை அவசர அவசரமாக வெளியிலே வைத்துவிட்டுப் பரீக்ஷை அறைக்குப் போனோம்.

கேள்வித்தாள் கொடுத்தவுடன் அந்தத் தாளைப் பார்த்தேன். பயத்தில் கேள்வித்தாள் முழுவதும் என் கண்களுக்கு இருட்டாகவே இருந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வெளிச்சம் வந்தது. கேள்விகளைப் பார்த்தவுடன் மிகவும் சந்தோஷம் உண்டாயிற்று. முதல் நாள் இரவு கண் விழித்துக் கொண்டு நான் படித்ததெல்லாம் அப்படியே வந்திருந்தன.

பயம் மாறி யோசிக்கத் தொடங்கினேன். எல்லாக் கேள்விகளும் நன்றாகத் தெரிந்த கேள்விகளாயிற்றே! எந்தக் கேள்வியை முதலில் எழுதுவது என்ற சிந்தனையிலேயே என் கண்கள் இருட்டியது போலத் தோன்றியது.

பரீக்ஷையை மும்முரமாகப் பையன்கள் எழுதிக்கொண்டிருந்தார்கள். ''ஸ்டெடி, இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கிறது'' என்று அங்கிருந்த உபாத்தியாயர் இரண்டு மூன்று முறை சொன்னார்.

அந்தச் சமயத்தில் 'குர்' என்று ஓசை வந்ததாம். பிறகு 'குர் குர்' என்று சற்றுப் பெரிதாக ஓசை உண்டாயிற்றாம். பிறகு 'குர் குர் குர்' என்று சற்று நீளமாகவும் பெரிய சப்தமாகவும் கேட்டதாம். பரீக்ஷை அறையில் எழுதிக்கொண்

டிருந்த பையன்களும், மேற்பார்வை செய்த வாத்தியாரும் எங்கிருந்து சப்தம் வருகிறது என்று பார்த்தார்களாம்.

என் சிநேகிதன் வைத்தி, ''சார், சார்! குண்டுச் சீமா குறட்டை விட்டுக்கொண்டு தூங்குகிறான், சார்!'' என்று கத்தினான். எல்லாப் பையன்களுடைய கண்களும் கடைசிப் பெஞ்சியில் உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்த என்மீது சென்றனவாம்.

உடனே அங்கிருந்த வாத்தியார் ஓடிவந்து, என்னைத் தட்டி எழுப்பி, ''என்னப்பா, பரீக்ஷையில் தூங்கறே? எழுந்திரு!'' என்றார். நான் தூங்கிவிட்டேன் என்பதை அறிந்தவுடன் எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பரீக்ஷை எழுதுவதற்காக வைத்திருந்த பேப்பரை மேஜையின்மீது பார்த்தேன். அது ஒரே வெள்ளையாகத்தா னிருந்தது. நான் ஏதாவது எழுதி இருந்தால்தானே அது கறுப்பாக இருக்கும்!

அறையில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். பரீக்ஷை முடிவதற்கு முக்கால்மணி நேரம் தானிருந்தது. உடனே நான், ''சார், ராத்திரியெல்லாம் கண் விழித்துப் படித்தேன், சார். அதனாலே என்னை அறியாமலேயே தூங்கிவிட்டேன். எனக்கு எல்லாக் கேள்விகளுக்கும் விடை தெரியும், சார். முக்கால் மணி நேரத்திலே எல்லாத்தையும் எப்படி எழுத முடியும்? சார், கொஞ்சம் டயம் கொடுங்கள் சார்!'' என்று கெஞ்சினேன்.

''அதெல்லாம் முடியாது. உனக்குத் தெரிந்த கேள்விகளை முக்கால் மணிக்குள்ளே எழுதிக்கொடு. உன்னை யார் பரீக்ஷையிலே தூங்கச் சொன்னது?'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். நான் அவசர அவசரமாகத் தெரிந்த கேள்விகளை எழுதிக்கொண்டு வந்தேன். சரியாக முக்கால் மணி நேரம் ஆனதுமே என் பரீக்ஷைப் பேப்பர் என் கையிலிருந்து பிடுங்கப்பட்டது. நான் வருத்தத்துடன் வெளியே வந்தேன்.

சாயங்காலப் பரீக்ஷை மூன்று மணிக்குத்தான் ஆரம்பம். அதனாலே வீட்டுக்குப் போய்விட்டு வரலாம் என்று நினைத்தேன். ஆனால் காலையில் நடந்ததை நினைத்தால் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அதுவும் நடந்த சமாசாரம் அப்பாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ என்று நான் நினைக்கும்போதே எனக்கு நடுக்கம் எடுத்தது. அதனால் மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போகவேயில்லை.

நான் பரீக்ஷையில் தூங்கின விஷயம் பள்ளிக்கூடம் முழுவதும் தெரிந்து விட்டது. ''குண்டுச் சீமா பரீக்ஷையில் தூங்கி விட்டானாம்!'' என்று பையன்கள் எல்லாரும் பேசிக்கொண்டார்கள். எனக்குத் தெரிந்த என் சிநேகிதர்கள் என்னைத் தேடிப் பிடித்து என்னைத் துக்கம் விசாரிக்க ஆரம்பித்தார்கள். என்னைச் சுற்றிக் கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. நான் அவமானத்தினால் தலைகுனிந்தேன்.

அந்தச் சமயத்திலே, ''சீமா!'' என்று என் தகப்பனார் கூப்பிடுவது போல இருந்தது. பயந்து நிமிர்ந்து பார்த்தேன். ஆமாம்; என் அப்பா தான் அங்கு நின்றார். என்னைச் சுற்றிக் கூடி இருந்த சிநேகிதர்களெல்லாம் விலகிப் போனார்கள்.

''சீமா, ஏன் சாப்பிட வீட்டுக்கு வரல்லே? ஏதோ வைத்தி வந்து நீ பரீக்ஷையில் தூங்கிட்டேன்னு சொன்னானே. அது நிஜம்தானா?'' என்று கேட்டார்.

நான் ஒன்றும் சொல்லவில்லை.

''ராக்கண் முழிச்சதனாலே நீ பரீக்ஷையில் வந்து தூங்கினே. எனக்குத் தெரிந்த சிநேகிதனுடைய பையன் பரீக்ஷை சமயத்திலே கண் விழித்துப் படித்து அவனுக்குப் பரீக்ஷைக்குப் போய் எழுத முடியாமலே ஜுரம் வந்துடுத்து. அவன் அந்த வருஷம் பரீக்ஷையில் தேறினதே மிகவும் கஷ்டமாய்விட்டது. உன்னுடைய அஜாக்கிரதையினாலே உனக்கு நன்றாகத் தெரிந்த கேள்விகளையே நீ எழுதமுடியாமல் ஆகிவிட்டது. இந்தச் சம்பவத்தை நீ உனக்கு ஒரு படிப்பினையாக வச்சுக்கோ. தெரியுமா? செகண்ட் பேப்பரை

எழுது?'' என்று என்னைத் தட்டிக் கொடுத்துவிட்டு அருகிலுள்ள காபி ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டுபோய் இளைப்பாற வைத்தார்.

என் அப்பா சொன்ன நல்ல புத்திமதியினாலும், தைரியத்தினாலும் அன்றைய மாலை நடந்த இங்கிலீஷ் செகண்ட் பேப்பரை நன்றாக எழுதினேன். வீட்டுக்குத் திரும்பினேன். ''பரீக்ஷை யெல்லாம் முடிஞ்சு போச்சோ இல்லையோ! நன்றாத் தூங்கு. அப்போதான் உனக்கு உடம்பு உடம்பாகும்'' என்றாள் என் பாட்டி. ''சீமா, பரீக்ஷையிலே தூங்கிட்டாயாமே, பாவம்! உசிரை விட்டுண்டு படிச்சே. போனாப் போறது. கவலைப் படாதே. பரீக்ஷையெல்லாம் பாஸ் ஆயிவிடும்'' என்று என் அம்மா எனக்குத் தைரியம் சொன்னாள்.

பரீக்ஷை முடிந்த பத்து நாளைக் கெல்லாம் எங்கப்பா, ''சீமா சீமா!'' என்று கூப்பிட்டார். அவர் கூப்பிட்டதிலிருந்து ஏதோ சந்தோஷ சமாசாரமாகத்தான் இருக்கும் என்று ஓடினேன்.

உடனே என் அப்பா, ''சீமா, உன் இங்கிலீஷ் வாத்தியாரைப் பார்த்தேன். இங்கிலீஷிலே பாஸ் ஆயிடுத்துன்னு சொன்னார். அதுவும் செகண்ட் பேப்பரிலே உன் வாழ்க்கையிலே நடந்ததும் உனக்குப் படிப்பினை ஆகவும் இருந்த ஒரு முக்கிய சம்பவத்தைப் பற்றி எழுதச்சொல்லி இருந்தாராம். நீ எழுதினது ரொம்ப நன்றாய் இருந்ததாம். அதைப்பற்றி உன் இங்கிலீஷ் வாத்தியார் ஒசத்தியாப் பேசினாரே. நீ என்ன எழுதினே?'' என்று கேட்டார்.

சந்தோஷம் அடைந்த நான், ''அப்பா, அப்பா! நான் அன்னி அன்னிக்குப் படிக்காமல் பரீக்ஷை என்றதும் ஒரேயடியாக ராத்திரி முழுவதும் படித்தது, பரீக்ஷையில் தூங்கினது, நீ பள்ளிக்கூடம் வந்து எனக்குப் புத்தி சொன்னது- இது எல்லாத்தையும் நடந்தது நடந்ததுபோல எழுதினேன்'' என்றேன்.

உடனே என் அப்பா சிரித்துக் கொண்டே என்னைத் தட்டிக் கொடுத்தார். அந்தச் சமயத்திலே தபால்காரன், ''தபால்!'' என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான்.

கடிதத்தில் சாமா மாமா ஊரிலிருந்து வருவதாக எழுதியிருந்தார்.

சாமா மாமா வருகிறார் என்றவுடன் நான் முகத்தைச் சுளித்துக் கொண்டேன். சாமா மாமா நல்லவர்தான். ஆனால் அவர் வந்து விட்டால் நடந்துபோன பாடத்தைப்பற்றி ஏதாவது கேள்வி கேட்டுக்கொண்டே இருப்பார். அதுதான் எனக்குப் பிடிக்காது. எனக்கு என்ன? யாருக்குத்தான் பிடிக்கும்? ஒவ்வொரு வருஷமும் லீவு விட்டவுடன் சற்று நிம்மதியாக இருக்கலாம் என்று நினைத்தால், சாமா மாமா வந்து தொந்தரவு கொடுப்பார். அதை அம்மாவிடம் சொல்ல முடியாது. ஏன் என்றால் எங்க அம்மாவுக்குக் கூடப் பிறந்த சகோதரராயிற்றே சாமா மாமா. அப்படி இருக்கும்பொழுது எப்படிச் சொல்ல முடியும்!

''சாமா வந்தால் நாம் எல்லோரும் திருச்சினாப்பள்ளி மலைக் கோட்டைப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்விட்டு வரலாம். சாமாவுக்குக் கோவில் குளம்னா ரொம்பப் பிடிக்கும்'' என்றாள் பாட்டி.

மறுநாள் காலையிலே ''என்ன, சீமா!'' என்று சொல்லிக்கொண்டே பழைய காலத்துக் கறுப்புக் கோட்டை நீளமாகப் போட்டுக் கொண்டு பெரிய தலைப்பாகை ஒன்றை அணிந்துகொண்டு ஒருவர் வீட்டிற்குள் வந்தார்.

''வா அப்பா, சாமா!'' என்று அவரை வரவேற்றாள் பாட்டி. சாமா மாமா பழைய காலத்து மனிதர். அவர் போட்டுக் கொண்டிருக்கும் கோட்டு வெகு காலமாக அவரிடம் இருந்து வருகிறது. அந்தக் கோட்டைப்பற்றிச் சொல்லும்போது ஒரு வேடிக்கையான சம்பவம் ஒன்று ஞாபகம் வருகிறது. சாமா மாமா ஒரு பள்ளிக்கூட உபாத்தியாயர். பாடம் சொல்லிக் கொடுப்பதில் மிகவும் கெட்டிக்காரர் என்று பெயர் வாங்கியவர். ஒரு நாள் அவர்

வேலை பார்த்து வரும் பள்ளிக் கூடத்தில் ஒரு வகுப்புக்குச் சரித்திரப் பரீக்ஷை நடந்து கொண்டிருந்தது. சாமா மாமாதான் அப்பொழுது அந்த வகுப்புக்கு மேற்பார்வையாளராக உட்கார்ந்து கொண்டிருந்தார்.

பரீக்ஷையில், 'மைசூர் சமஸ்தானத்தைத் திப்புசுல்தான் ஆளுவதற்கு முன் யார் அரசாண்டு வந்தார்? அவர் பேரையும் அவரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததையும் எழுதுக!' என்று ஒரு கேள்வி கேட்கப்பட்டிருந்தது. இந்தக் கேள்விக்குப் பத்து மார்க்கு என்றும் குறிக்கப்பட்டிருந்தது. பல பையன்களுக்கு அந்த அரசனுடைய பெயர் நன்ருகத் தெரிந்திருந்தும் ஞாபகத்திற்கு வராமல் பரீக்ஷையில் தவித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குக் காரணம் கேள்வி சம்பந்தப்பட்ட பாடம் நடந்து வெகு காலம் ஆனதுதான். பையன்கள் தவித்துக்கொண்டு யோசனையிலிருக்கும் சமயத்தில் சாமா மாமாவின் நண்பர் ஒருவர் வகுப்புக்குள் வந்து, ''என்ன சார்! இன்னும் இந்த ஹைதர் அலி காலத்துக் கோட்டை விடமாட்டேன் என்கிறீர்களே!'' என்று என் மாமா போட்டிருந்த நீளக் கறுப்புக் கோட்டைச் சுட்டிக் காண்பித்தார். உடனே பையன்களிடத்திலே ஒரு பரபரப்பு ஏற்பட்டது. யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தவர்கள் வேகமாக எழுத ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு ஞாபகம் வராமல் இருந்த அரசன் ஹைதர் அலியின் பெயர் அப்பொழுது சமயத்தில் ஞாபகப்படுத்தப்பட்டதுதான் அதற்குக் காரணம். பரீக்ஷை எழுதி முடிந்தபின் பையன்கள் எல்லாரும் சாமா மாமாவைச் சுற்றிக்கொண்டு, ''சார், சார்! உங்களுக்கு ஒரு வந்தனம், உங்கள் கோட்டுக்கும் ஒரு வந்தனம், சார். இந்தக் கோட்டை நீங்கள் போட்டுக்கொண்டு வராவிட்டால் எங்களுக்குச் சுளையாகப் பத்து மார்க்கு போய் இருக்கும், சார்'' என்று சொன்னார்கள். விஷயத்தை அறிந்த சாமா மாமா விழுந்து விழுந்து சிரித்தார். அதனுல் அவர் போட்டுக் கொண்டிருக்கும் கோட்டை யாராவது பழைய காலத்துக் கோட்டு என்று சொல்லிவிட்டால் போதும்; உடனே இடது கையினுல் உச்சிக் குடுமியைத் தடவியபடியே எப்படி இந்தப் பழைய கோட்டு, பையன்கள் பரீக்ஷைக்கு உபயோகமாய் இருந்தது என்பதைப்பற்றி ஒரு குட்டிப் பிரசங்கம் செய்து விடுவார்.

''ஏண்டாப்பா, சாமா! நான் எழுதியிருந்த கடுதாசு கிடைச்சுதோ, இல்லையோ? எப்போ திருச்சினுப்பள்ளி மலைக் கோட்டைக்குப் போயிட்டு வறது?'' என்ருள் பாட்டி.

''நாளைக் காலை வண்டிக்கே புறப்பட்டுப் போகலாம். சாயங்காலம் திருச்சினுப்பள்ளிக்குப் போயிடலாம். ஏண்டா சீமா, பரீக்ஷையெல்லாம் சரியா எழுதியிருக்கியா? இல்லே பாஸ் ஆகிறத்துக்கு மார்க் உண்டியல் ஏதாவது குலுக்கனுமா?'' என்ருர்.

''என்ன மாமா, நீ சொல்லறது புரியவில்லை. மார்க் உண்டியல்னு, என்ன?''

''என்னடா. இது தெரியலலைன்னு சொல்றே! பரீக்ஷை எழுதி இருக்கும் பையன் குறைவா மார்க்கு வாங்கியிருக்கான்னு தெரிந்தா ஹிஸ்டிரி வாத்தியார், கணக்கு வாத்தியார், இங்கிலீஷ் வாத்தியார், தமிழ் வாத்தியார் இதுமாதிரி ஒவ்வொரு வாத்தியாரிடமும் போய், அந்தப் பையனின் தகப்பனுரோ, அல்லது அவனுக்குச் சம்பந்தப்பட்ட வேறு யாரோ, 'சார், என் பையன் குறைவா மார்க்கு வாங்கி இருக்கானும். ஐந்து மார்க் போடுங்க, சார், ஏழு மார்க் போடுங்கோ சார், நான்கு மார்க் போடுங்கோ' என்று ஒவ்வொரு வாத்தியாரையாப் போய் கேட்கிறதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அதுமாதிரி உனக்கு ஏதாவது உண்டியல் குலுக்கனுமோ?'' என்ருர்.

''அதெல்லாம் வேண்டாம், மாமா. நான் பாஸ் பண்ணி விடுவேன்'' என்றேன்.

(தொடரும்)

தேர்தல்

ஜே. எம். சாலி

சங்கர்:

பள்ளிப் பாடங்களெல்லாம் துவங்கிவிட்டது. இனி வகுப்புக்கு ஒரு தலைவன் தேவை. வகுப்புத் தலைவன் தேர்தல் இன்னும் ஒன்றிரண்டு தினங்களில் நடந்தே தீரும். நாமும் ஓர் அபேட்சகராக நிற்கவேண்டும். அந்தப் பொல்லாத சுந்தரம் ஒருவன் இருக்கிறானே! அவன் வேறு போட்டிக்கு வந்து விடுவான். சே, அவனை ஈ மாதிரியல்லவா எல்லாப் பையன்களும் மொய்க்கிறார்கள்! நண்பர்களின் பக்கபலம் அவனைப் போட்டிக்கு நிற்கச் செய்கிறது. வருஷா வருஷம் லீடராக வந்து விடுகிறான். இந்த வருஷம் எப்படியாவது அவனை அவமானப்படுத்திவிட வேண்டும். நான் என்ன கெட்டவனா? எனக்கு வகுப்புத் தலைவன் பதவியிலிருக்கத் தகுதியா இல்லை? நான் எவ்வளவு இனிமையாகப் பேசினாலும் என்னை ஒருவன்கூட மதிக்க மாட்டேன் என்கிறான். மாணவர் உலகமே இப்படித்தான்! எவனாவது ஒரு பொருளைக் கொடுத்தால் அவனையே இந்தப் பாழாய்ப் போன மாணவர்கள் சுற்றுவார்கள். கையில் ஒன்றும் இல்லாவிட்டால் 'போடா..போ' என்று கைவிட்டு விடுவார்கள்.

இந்த வருஷம் லீடர் பதவி எனக்கே வந்து சேர வேண்டும். புது நண்பர்கள் சிலரைச் சேர்த்துக்கொண்டு காரியத்தை முடிக்க வேண்டும். சுந்தரம் ஓர் ஏமாந்த சோணகிரி; அநுபவம் இல்லாதவன். புத்தகப் புழுவுக்கு அறிவு எவ்வாறு வரப் போகிறது?

ஆகா! ஒரு நல்ல யோசனை! மாணவர்களிடம் சென்று, 'ஐஸ்கிரீம் வாங்கித் தருகிறேன், அது வாங்கித் தருகிறேன். எனக்கு வோட் செய்யுங்கள்' என்று ஆசை காட்டினால் மறுக்கவா போகிறார்கள்? சரி, நண்பன் சோமுவிடம் போய் இந்த யோசனையைக் கூறிவிட்டு வருகிறேன்.

சுந்தரம்:

நாளைக்கு வகுப்புத் தலைவன் தேர்தல் நடக்கப் போகிறது. வருஷந்தோறும் இந்த லீடர் பதவி எனக்கே வந்து சேருகிறது. அது என்ன சாதாரண வேலையா? வகுப்பைக் கவனிப்பதிலேயே பாடங்களைக் கூடக் கவனிக்க முடிவதில்லை. எனக்கு அதில் கடுகளவுகூடப் பிரியமில்லை. என்னவோ! வகுப்பு மாணவர்கள் எல்லோரும் என்னிடம் அவ்வளவு இனிமையாகப் பேசி என்னையே தலைவனுக்கக் கருதியுள்ளனர். நான் என்ன அவ்வளவு நல்லவனா? அவர்களுக்கெல்லாம் என்ன கொடுக்கிறேன்? ஏதோ எனக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆசிரியர்களும் என்னிடம் பிரியமாகத்தானிருக்கிறார்கள். வகுப்பிலுள்ள அத்தனை பேரும் என்னிடம் அன்பாகப் பழகும்போது இந்தச் சங்கரன் மட்டும் ஏன் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன் என்றிருக்கிறான்? நான் அவனுக்கு என்ன தீங்கு செய்து விட்டேன்? ஓகோ! இந்த லீடர் தேர்தல் தான் காரணமாயிருக்க வேண்டும். அவனும் எனக்குப் போட்டியாக வருஷா வருஷம் தேர்தலில் கலந்து கொண்டுதானிருக்கிறான். ஆனால் ஏமாற்றந்தான் அவனை அணுகுகிறது. நான் மானீட்டராக விரும்பவில்லை. என் சிநேகிதர்களெல்லாம் என்னைப் போட்டியில் நிற்கவேண்டும் என்று தூண்டிவிட்டனர். நானும் சம்மதித்து விட்டேன். இந்த யோசனை முன்பே இருந்தால் சங்கரனையே தேர்தலில் புகுத்தி நான் விலகி

இருப்பேன். என் மேல் அவனுக்குள்ள பொறாமையும் நீங்கியிருக்கும். சங்கரன் மட்டும் என்னிடம் பேசாமலிருப்பது எனக்கு என்னவோ போலிருக்கிறது. அவனுடைய மனத்திலே நான் கெட்டவன் என்று இடம் பெற்று விட்டேன்! சரி, என்றைக்காவது அவன் மனமாற்ற மடையாமலா போவான்? நாளைத் தேர்தலில் சங்கரனே தேர்ந்தெடுக்கப்பட்டால் எனக்கு மிகவும் நல்லது. நடப்பது நடக்கட்டும்.

சுசீலா:

மாணவிகளுக்கு ஒரு ஸ்தானம் வேண்டும் என்பதற்காக என் தோழிகளெல்லாம் என்னை லீடர் பதவிக்குப் போட்டி போடுமாறு வற்புறுத்தியதின் பேரில் நானும் ஒப்புக்கொண்டு விட்டேன். இத்தனை மாணவர்களுள்ள வகுப்பில் எனக்கு ஒரு போதும் வெற்றிஎன்பது கிட்டாது; பெண்களும் தலையிட வேண்டும் என்பதற்காக வேண்டா வெறுப்புடன் கலந்து கொண்டிருக்கிறேன். மாணவர்களை அடக்குவது என்பது மாணவியால் முடியுமா? அப்பப்பா! முடியாத காரியம். நினைத்தாலே பயமாயிருக்கிறது. அவர்களின் கேலிக்கல்லவா ஆளாக வேண்டும்! சுந்தரம் இருக்கிறான்: அவனைப் போன்ற நல்ல மாணவன் வகுப்பிலேயே கிடையாது. பொறுமையும் பொறுப்பும் உள்ளவன். தற்புகழ்ச்சி யற்றவன். வழக்கம் போல் இந்த ஆண்டும் அவனே தான் தலைவனாக இருக்கவேண்டும்; போன வருஷங்கூட இன்ஸ்பெக்டர் வகுப்பைப் பார்வையிட்டபோது, "இதைப் போன்ற ஒரு நல்ல வகுப்பை நான் பார்த்ததே இல்லை; பையன்களும் பெண்களும் நிரம்பச் சமர்த்து" என்றெல்லாம் புகழ்ந்தாரே! அதற்கெல்லாம் யார் காரணம்? எல்லாம் சுந்தரத்தின் முயற்சியே அல்லவா?

சங்கர் வேறு போட்டிக்கு நிற்பான். அவன் பெரிய பொறாமைக்காரன், எப்பொழுது பார்த்தாலும் முகம் எள்ளும் கொள்ளும் வெடிப்பது போலவே இருக்கிறது. அவனிடமிருந்து ஒரு நல்ல வார்த்தை கூட வரவழைக்க முடியவில்லையே! அவன் மட்டும் லீடராகி விட்டால், வகுப்பே தலைகீழாகத்தானிருக்கும். பொறுப்பில்லா அவனா வெற்றி பெறப் போகிறான்? ஒரு போதும் இல்லை! லீடருக்கேற்ற தகுதியுள்ளவன்

சுந்தரம் ஒருவன்தான். நானும் என் 'வோட்'டைக்கூடச் சுந்தரத்திற்கே அளிக்கப் போகிறேன். அவன் நடத்தைகளெல்லாம் எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. எனக்கு லீடர் பட்டத்தைத் தந்தாலும் தேவையில்லை. நாளைக்கு எல்லாம் தெரியப் போகிறது. பார்த்துக் கொள்வோம்.

சங்கர்:

என் திட்டத்தை என் நண்பன் சோமுவும் ஆதரித்து விட்டான். நானும் அவனும் நேற்றே எல்லாப் பையன்களிடமும் என் மனக் கருத்தை வெளியிட்டு ஆசை காட்டினேம். அவர்களும் ஒப்புக் கொண்டார்கள். ஐஸ்கிரீம் என்றதும் வாயைப் பிளந்தார்கள். லீடர் பதவி



மட்டும் எனக்கு வரட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளுகிறேன். என்னுடைய உள்ளத்தை எல்லா மாணவர்களும் இப்பொழுதுதான் அறிந்திருக்கிருர்கள். நான் நல்லவன் என்பது அவர்களுக்குப் புரிந்துவிட்டது. இனி அவர்கள் சுந்தரத்தைக் கூட அணுக மாட்டார்கள். எனவே நானே லீடர் என்றுகூடச் சொல்லிக் கொள்ளலாம். சுந்தரத்தின் ஆணவமும் அலட்சியமும் இன்று மாலை தேர்தல் முடிவு தெரிந்தவுடன் பறக்கப் போகிறது. நான் வகுப்புத் தலைவனுகி விட்டால் சுந்தரம் பெட்டிப் பாம்புதான். மாலை வந்து விட்டது. 'வோட்' செய்வதற்குரிய ஏற்பாடும் முடிந்து விட்டது. எல்லோரிடமும் ஆன மட்டும் எனக்கே 'வோட்' போடுமாறு கூறியிருக்கிறேன். எல்லா மாணவ மாணவிகளும் தங்கள் வாக்கை அளித்து விட்டார்கள். முடிவுதான் பாக்கி. அதோ, ஆசிரியர் சிரித்துக்கொண்டே வருகிருரே! என்ன முடிவோ தெரியவில்லை. ஏதோ சொல்ல வாய் எடுக்கிருரே! ஆசிரியர் பேசுகிருர்:

"மாணவர்களே! மாணவிகளே! இவ்வகுப்பின் மானீட்டர் தேர்தலின் முடிவை அறிவிக்கப் போகிறேன். வழக்கம் போல் சுந்தரமே இந்த வருஷமும் அதிக வாக்கைப் பெற்று அமோக வெற்றியை அடைந்துள்ளான். மொத்த வாக்கு 40. சுந்தரத்துக்கு 29. சுசீலாவிற்கு 9. சங்கரனுக்கு 2. சுந்தரத்தின் அமோக வெற்றியைப் பாராட்டுகிறேன். அவன் எப்பொழுதும் போல் இந்த வருஷமும் லீடர் பதவியை மேற்கொண்டு வகுப்பை உயர்த்தும் பணியில் ஈடுபடுவான். மானிட்டர் சுந்தரம் அவனது வெற்றி குறித்துத் தற்பொழுது சில வார்த்தைகள் பேசுவான்."

இதைக் கேட்ட எனக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. இப்படி அவமானப்படுவேன் என்று நான் கனவிலும் கருதவில்லை. தலையைக் கீழே குனிந்துகொண்டேன்.

சுந்தரம்:

'கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பியத்துக்கொண்டு கொடுக்கும்' என்பார்களே, அது போலல்லவா ஆகிவிட்டது! எனக்கே லீடர் பட்டம் கிடைத்து விட்டது. இது சங்கரனுக்குப் போயிருக்கக் கூடாதா? சரி, ஆசிரியர் ஓரிரு வார்த்தை பேசச் சொன்னாரே! பேசுவோம்: ''மாணவத் தோழர்களே! தோழிகளே! இவ்வாண்டு வகுப்புத் தலைவன் தேர்தலில் எனக்குக் கிடைத்த வெற்றியைக் குறித்து மகிழ்ச்சியடைகிறேன்: ஆனால் சங்கரன் லீடராக வர எவ்வளவோ முயற்சிகள் எடுத்ததை அறிந்த எனக்கு வருத்தமாக இருக்கிறது. நான் மானீட்டர் பதவியில் இருந்து அலுத்துவிட்டது. எனவே தேர்தலுக்காக வேண்டி மிகவும் சிரமப்பட்ட சங்கரனையே வகுப்புத் தலைவனாக்க உங்கள் சார்பாகவும் நம் ஆசிரியர் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.''

அப்பா....! இப்பொழுது தான் என் மனம் நிம்மதியாக இருக்கிறது. சங்கரனுக்கு என் மேலிருந்த பகை இனியாவது விலகாதா? ஆசிரியரும் மற்றவர்களும் என் கூற்றுக்கு என்ன சொல்லப் போகிறார்களோ!

சங்கர்:

என் மதிமயக்கம் தீர்ந்து விட்டது. இவ்வளவு நல்ல குணம் படைத்த சுந்தரத்தையா இவ்வாறு நினைத்தேன்? என் அறிவீனத்தால் என்னையே நான் மாசுபடுத்திக் கொண்டேன்! சுந்தரத்தின் தன்மைகளெல்லாம் இப்பொழுதல்லவா தெரிகிறது! தன் பதவியையே அலட்சியம் செய்து எனக்குத் தரும் சுந்தரத்தை என்னவென்பது? எனக்கு இந்த மானீட்டர் உத்தியோகமே தேவை இல்லை. மாணவர்களும் ஆசிரியரும் குழப்பத்தோடு இருக்கிறார்கள். என் முடிவை இதோ அவர்களிடம் வெளியிடுகிறேன்:

''ஆசிரியரவர்களே! மாணவத் தோழர்களே! தோழிகளே! முதலில் நான் என் செயலுக்கு உங்களிடம் மன்னிப்புக் கோருகிறேன். சுந்தரத்தின் மேலிருந்த அசூயையால் நான் இவ்வளவு நாளாக அவனிடம் பேசுவது கிடையாது. என்னை ஒருவரும் அணுகுவதில்லை; அதனால் என் சினம் எல்லை மீறியது. நான் லீடராக ஆவதற்கு என்ன என்னவோ செய்தேன். 'ஐஸ்கிரீம், அது இது எல்லாம் வாங்கித் தருகிறேன். எனக்கு மட்டும் வோட் அளியுங்கள்' என்று மாணவர்களிடம் ஆசை காட்டினேன்.

அவர்களும் பகட்டுக் காட்டினர். அவர்கள் உள்ளம் சுந்தரத்தையே நாடியிருந்தன. அதன் பொருட்டு சுந்தரத்திற்கே வெற்றி கிடைத்துவிட்டது. என் மதியீனத்தால் சுந்தரத்தை மடையனென்றே மதித்து விட்டேன். அவனது அறிவும் அன்பும் பண்பும் ஆரிருள் அடர்ந்த அகத்தைத் தெளிவுபடுத்தி என்னை உயர்ந்தோனாக்கி விட்டது. சுந்தரத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? எனவே இந்த வருடம் இன்றைத் தேர்தலில் வெற்றி பெற்ற சுந்தரமே இனி லீடர் என்பதை உங்களுக்கு மீண்டும் அறிவுறுத்துகிறேன்.''

அதற்கு மேல் என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. சுந்தரத்திடம் தனியே சென்று மன்னிப்புக் கோர விரும்பினேன். என் இடத்தில் அப்படியே அமர்ந்து விட்டேன்.

சுசீலா:

நான் நினைத்தபடியே தேர்தல் முடிந்து விட்டது. சுந்தரம் சிறுவனாக இருந்தாலும் சமர்த்தன்தான். தன் பதவியையே தியாகம் செய்து சங்கரனின் கெட்ட மனத்தைத் திருத்திய சுந்தரம் உத்தமன்தான். நல்லவனுக்குத்தானே நல்லது கிடைக்கும்! சுந்தரத்தால் சங்கராவது திருந்தினானே! சுந்தரத்தின் தியாகமும் அன்புமே அவனை மீண்டும் தலைவனாக்கி விட்டன. இனி வகுப்பில் இன்பம் நிலவியிருக்கும். சுந்தரம்தான் இனி வகுப்புத் தலைவன்: சுந்தரத்திற்கு ஜே!

காட்சி-1

நேரம்: காலை சுமார் 11 மணி.

இடம்: ரங்குவின் வீடு.

(ரங்கு வாசலில் நிற்கிறான். அவன் அருகில் நண்பன் மணி நிற்கிறான்.)

மணி: அதோ பாரடா! ராஜு வருகிறான்.

ரங்கு: கடவுளே! அவன் இங்கேயும் வந்து தொலைஞ்சுட்டானா? பேச ஆரம்பித்தால் இப்போதைக்கு நிறுத்தமாட்டானே!

மணி: கையிலே ஏதோ புஸ்தகம் வச்சுண்டிருக்கான்.

ரங்கு: ஆசிரியர் ஒரு வேளை அதிலே அவன் கதையை மறந்து கிறந்து போட்டிருப்பார். அதைப் பற்றி டம்பம் அடிக்கத்தான் இங்கே வறான் போலிருக்கு.

மணி: என்னடா ராஜு! எங்கே கிளம்பினே இப்படி..

ராஜு: ஒண்ணுமில்லேடா! இங்கே ஒருத்தர் வீட்டிற்குப் புறப்பட்டேன். வழியிலே உங்களைப் பார்த்ததும்..

ரங்கு: (மனத்திற்குள்) இதிலே கொஞ்சம் பொய் வேறா? (வெளியில்) அதென்னடா புத்தகம்?

ராஜு: (அசட்டுச் சிரிப்புடன்) ஹி! ஹி! இதிலே பாரு, என் கதை வந்திருக்கு!

மணி: கொண்டா பார்க்கலாம்.

ரங்கு: (பிரித்துப் பார்த்துவிட்டு) ஓ! இதுவா! நான் நேற்றே படிச்சுட்டேன்.

ராஜு: எப்படி இருக்கு?

ரங்கு: டேய்! ரொம்ப நன்னாயிருக்குடா!

ராஜு: அதிலே ஓர் இடம் பாரு, குமாருக்கும் அவன் நண்பனுக்கும் சண்டை நடக்கிறதே, அந்த இடத்திலே நடை நன்றாக இல்லை?

ரங்கு: ஆமாம்! நடை ரொம்ப 'ஸ்டைலா'யிருக்கு! அப்பா! எப்படி, கனல் பறக்கிறது பேச்சிலே! அப்படியே நேரில் பார்ப்பதுபோல் இருக்கு! சரி! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு, வரட்டுமா?

ராஜு: இருடா! இருடா! அதிலே கடைசியிலே முடிவு உணர்ச்சியைத் தூண்டும்படியாயில்லை?

ரங்கு: ஆமாமாம்! அதைப் படிச்சுட்டு அப்படியே நான் அழுதுட்டேன்! இப்ப நினைத்தால்கூட அழுகை அழுகையா வறது! சரி நான் வறேன்.

ராஜு: சரி! நானும் போயிட்டு வறேன். நாளைக்குச் சாவகாசமா வறேன். (போகிறான்.)

மணி: நிஜமா நீ அதைப் படிச்சயோ?

ரங்கு: ஹும்! அது என்ன கதைன்னாகூட எனக்குத் தெரியாது. நான் அப்படிப் பேசியிருக்கல்லேன்னா அவன் இப்பல்லாம் போவானா? கதையைப் படிக்க வச்சுட்டுன்னா போவான்!

மணி: கதையைப் படிச்சுப் பார்த்துட்டு ஏதாவது சொல்லியிருந்தால் நன்னாயிருக்கும்.

வீணாகப் பொய் பேசியிருக்க வேண்டாம்.

ரங்கு: போடா நீ ஒண்ணு! கதையைப் படிச்சா மட்டும் என்ன? அப்பவும் பொய்தான் பேச வேண்டியிருக்கும்.

மணி: ஏன்?

ரங்கு: அவன் கதையை மனுஷன் படிப்பானா? என்னமோ தவறிப் போய் அச்சாயிடுத்து. 'உன் கதை சுத்த மோசம்' அப்படீன்னா அவன் சும்மா இருப்பானா? 'என் ஸ்டாம்பு ஆல்பத்தைக் கொண்டா, பந்தைக் கொண்டா'ன்னு கழுத்தறுக்க ஆரம்பிச்சுடுவானே!

மணி: ஆனாலும் இந்த அல்ப விஷயத்திற்கெல்லாம் பொய் பேசியிருக்க வேண்டாம். பொய் பேசறவாளுக்கு நரகம்தான் கிடைக்கும்னு அன்றைக்கு ஆசிரியர் சொன்னாரே, நினைவில்லையா? சரி, நான் போயிட்டு வறேன்.

காட்சி-2

நேரம்: பிற்பகல் 2 மணி.

இடம்: ரங்குவின் வீடு.

('ஈஸிசேரி'ல் சாய்ந்தவாறு யோசித்துக்கொண் டிருக்கிறான். 'இனிமேல் எதற்கும் பொய்யே பேசக்கூடாது என்று தீர்மானித்துக்கொள்ளலாமா?' என்று சிந்திக்கிறான். அப்பொழுது அங்கே அவன் தந்தை வருகிறார்.)

அப்பா: டேய் ரங்கு! இதோ பார்! நான் தூங்கப் போகிறேன். கடன்காரன் நமசிவாயம் வருவான். வந்தால் நான் இல்லேன்னு சொல்லிடு. கோடி வீட்டுக் குப்புசாமி வந்தால் உடனே என்னை எழுப்பு.

ரங்கு: சீட்டாடத்தானே அப்பா?

அப்பா: டேய், சொல்றேன்; அதை விட்டுட்டு என்னையே 'க்ராஸ்' பண்றயே! சொன்னதைச் செய். (போகிறார்.)

ரங்கு: ஹூம்! அப்பாவே பொய் பேசக் கற்றுக் கொடுத்துட்டுப் போறார். நாம் எப்படி உண்மை பேசறது? பார்க்கலாம்.

(யோசித்தவாறு அப்படியே தூங்கிவிடுகிறான்.)

காட்சி-3

(யாரோ எழுப்புவதை உணர்ந்து ரங்கு கண் விழிக்கிறான். எதிரே ஒருவர் நிற்கிறார்.)

வந்தவர்: தம்பி! உங்க அப்பா இருக்காரா?

ரங்கு: நீங்க நமசிவாயமாக இருந்தால் அப்பா இல்லே! வெளியே போயிருக்கிறார்! நீங்க கோடி வீட்டுக் குப்புசாமியாயிருந்தால் அப்பா உள்ளே தூங்குகிறார்! போய் எழுப்புகிறேன். நீங்க யாரு?

வந்தவர்: உம், நானா? நான்தான் நமசிவாயம்! ஒவ்வொரு முறையும் உங்க அப்பா இப்படித்தான் பொய் பேசிட்டு உள்ளே பதுங்கிக்கிறாரா? கொடுத்த கடனைத் திருப்பிக் கொடுக்க வழியில்லே! கூப்பிடு சொல்றேன், உங்க அப்பாவை.

(அந்தக் கத்தலில் கண் விழித்த அப்பா வெளியே வருகிறார். ரங்குவைக் கோபத்துடன் முறைத்துவிட்டு கடன்கார நமசிவாயத்தைச் சமாதானப்படுத்தி வெளியே அழைத்துப் போகிறார். நல்ல வார்த்தைகள் சொல்லி அவரை அனுப்பிவிட்டு உள்ளே வருகிறார்.)

அப்பா: (கோபத்துடன்) டேய்! உன்னை செய்யச் சொன்னது என்ன, நீ செய்தது என்ன? ஏண்டா, உடம்பிலே ஊறல் எடுக்கிறதா? உதை கிதை..

ரங்கு: (நடுங்கியபடி) இல்லேப்பா! இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்.

(அப்பா உள்ளே போகிறார்.)

ரங்கு: அட கடவுளே! உண்மை பேசியதன் பலன் கைமேலே கிடைச்சுடுத்து. (சோர்ந்து போய் உட்காருகிறான். அவன் தாய் வருகிறாள்.)

அம்மா: டேய் ரங்கு! மேலே போய் உன் அக்காவைக் காபி சாப்பிடக் கூட்டிண்டு வா.

(மேலே போகிறான். அங்கே அவன் அக்கா மேஜை விரிப்பில் பூ வேலை செய்துகொண் டிருக்கிறாள்.)

ரங்கு: அக்கா! உன்னை அம்மா கூப்பிடறாள்.

அக்கா: எதுக்குடா?

ரங்கு: காபி குடிக்க.

அக்கா: சரி! இங்கே வா. இதோ பாரு! இந்தப் பூ, கிளி இதெல்லாம் எப்படி இருக்கு? நானே போட்டேன்.

ரங்கு: வேண்டாம் அக்கா! நான் சொல்லலே!

அக்கா: பரவாயில்லே! சும்மாச் சொல்லுடா!

ரங்கு: இல்லே! எனக்குப் பயமாயிருக்கு!

அக்கா: இதிலே என்னடா பயம்? சும்மாச் சொல்.

ரங்கு: வந்து..வந்து..இந்தக் கிளி..கிளி மாதிரியே..இல்லே.

அக்கா: பின்னே?

ரங்கு: வந்து..காக்கா மாதிரி இருக்கு!

அக்கா: டேய் குரங்கு! நான் காலேயிலிருந்து எவ்வளவு கஷ்டப்பட்டுப் போடறேன். ஒரு விநாடியிலே நன்னயில்லேன்னு சொல்லிட்டாயே. உன்னே என்ன பண்றேன் பாரு! இந்த ஊசியாலேயே உன் கண்ணேக் குத்திடறேன் வா!

(கோபமாக எழுந்திருக்கிருள். 'ஐயோ' என்று கத்தியவாறு கீழே ஓடுகிருன் ரங்கு.)

அம்மா: டேய் ரங்கு! வந்து காபி குடிச்சுட்டுப் போ.

ரங்கு: அம்மா! அந்த அடுக்கிலே என்னம்மா மூடி வைச்சிருக்கே?

அம்மா: அதுவா? மைசூர்ப்பாகு.

ரங்கு: ஏது அம்மா? எப்போ செய்தே?

அம்மா: நான் செய்யலேடா. அதோ பார் உங்க மாமி. அவ்தான் செய்து எடுத்துண்டு வந்தா.

ரங்கு: எனக்கு ஒன்று கொடு, பார்க்கலாம்!

(மாமி எடுத்துக் கொடுக்கிருள்.)

ரங்கு: இது என்ன விள்ள முடியல்லே. அப்பப்பா! கருங்கல் மாதிரி இருக்கே!

மாமி: கொண்டா விண்டு தறேன். இந்தா. எப்படி இருக்கு?

ரங்கு: மாமி! உண்மையைச் சொல்லிடவா?

மாமி: உம்!

ரங்கு: எல்லாம் வேஸ்ட்!

மாமி: என்னடா சொல்றே?

ரங்கு: ஆமாம் மாமி. உண்மையாத்தான் சொன்னேன். கோவிச்சுக்காதீங்க! கடலே மாவு, சர்க்கரை, கரி, கட்டை எல்லாம் வேஸ்ட். மைசூர்ப்பாகைச் சாப்பிடறமாதிரியே இல்லே! செங்கல் துண்டைக் கடிச்சுச் சாப்பிடறுப் போல இருக்கு! சுத்த மோசம்.

அம்மா: டேய் ரங்கு! முதல்லே இங்கிருந்து போகப்போறியா இல்லேயா? வர வர வாயும் கையும் ஜாஸ்தியாயிடுத்து! ரொம்பத் தெரிஞ்சவன் மாதிரி பேச வந்துட்டான். அவள் அருமையாகக் குழந்தைகளுக்கு மைசூர்ப்பாகு செய்து எடுத்துண்டு வந்திருக்கா, அது நன்னயில்லேயாம். ராஸ்கல்!

அக்கா: (வந்துகொண்டே) ஆமாம்மா! வர வர ரங்கு குரங்கா மாறிண்டு வருன். நான் எவ்வளவு அழகா கிளி போட்டிருக்கேன். அது இந்தக் குரங்கு மூஞ்சிக்குக் காக்கா மாதிரி இருக்காம்..

ரங்கு: (மெதுவாக) சரி! சரி! இங்கே இருந்தால் இனி ஆபத்துத் தான். (ஓடுகிருன்.)

காட்சி-4

(தெருவில் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிருன் ரங்கு. அவன் பின்னுல் அவன் நண்பன் பாலன் சைக்கிளில் வருகிருன்.)

பாலன்: டேய் ரங்கா! சைக்கிளில் வரயாடா ஒரு ரவுண்டு?

(ரங்கு பின் 'ஸீட்'டில் ஏறி உட்காருகிருன்.)

பாலன்: டேய்! இப்போ எப்படிடா இருக்கு?

ரங்கு: என்னே எதுவும் கேக்காதேடா! பேசாமல் விடு!

பாலன்: சும்மாச் சொல்லுடா!

ரங்கு: டேய் உண்மையைச் சொல்லிடறேன். அப்புறம் கோவிச்சுக்காதே. வெறும் ஓட்டை! இந்தச் சத்தத்திலே தலே வலிக்கிறது! குலுக்கலில் உடம்பெல்லாம் வலிக்கிறது!

பாலன்: டேய்! என்னமோ அன்றைக்குப் பிரமாதமா 'ஏரோப்ளேனில் போருப்போல இருக்கு! உன் சைக்கிள் மாதிரி வருமாடா!' அப்படி இப்படின்னு புகழ்ந்து தள்ளினயே. இப்ப வந்து..

ரங்கு: அப்ப என்னமோ அப்படிச் சொன்னேன். எனக்குப் பொய்

சொல்ல இஷ்டமில்லே. உன் சைக்கிள் வெறும் ஓட்டை! அதைப் போட்டுட்டு ரெண்டு பேரீச்சம் பழமாவது வாங்கிச் சாப்பிடு!

(பாலன் திடீர் 'பிரேக்' போடுகிருன்.)

பாலன்: டேய்! உன் மனசுக்குள்ளே அரிச்சந்திரன்னு நினைப்புப் போலிருக்கு! சரிதான்! இறங்குடா கீழே. இனிமே இதிலே நீ ஏறு சொல்றேன்!

(வேகமாகப் போகிருன். வேறு பக்கத்திலிருந்து ராஜு வருகிருன்.)

ராஜு: என்னடா பாலன் அப்படி 'விர்'ரென்று போகிருன்?

ரங்கு: அவனிடம் 'உன் சைக்கிள் ஓட்டை' என்று சொன்னேன். கோபம் வந்துடுத்து. அதுதான் அப்படிப் போருன்.

ராஜு: பின்னே அது ஓட்டை இல்லாமல் புத்தம் புதுசுன்னு நினைச்சுண்டிருக்கான் போலிருக்கு. சுத்த வறட்டுப் பயல்! உண்மையைச் சொன்னுல் உடம்பெரிச்சலாத்தானே இருக்கும்!

ரங்கு: சரி! நீ எங்கே போறே?

ராஜு: உன் கிட்டத்தான் வந்தேன். இதோ பார்! இன்னெரு கதை எழுதியிருக்கேன். படிச்சுப் பார்க்கிருயா?

ரங்கு: டேய் ராஜு, உண்மையிலே நான் முந்தின கதையையே படிக்கல்லே!

ராஜு: பின்னே அப்போ ரொம்ப நன்னுயிருக்குன்னு சொன்னுயே?

ரங்கு: நான் இன்னிலேயிருந்து உண்மையே பேசறதாகத் தீர்மானிச்சுட்டேன். அதனுலே இப்போ சொல்றேன் கேட்டுக்கோ! நீ எழுதுவது ஒன்றுகூட நன்னுயில்லே! காகிதத்திற்கும் மசிக்கும் கேடாக இனிமேல் எழுதாதே! தண்டம்!

ராஜு: ஓகோ! அப்படியா! சரிதான்! உன் 'அட்வைசு'க்கு மிக்க நன்றி! முதல்லே என்னுடைய பந்து, மட்டை, 'ஆல்பம்' எல்லாவற்றையும் கொண்டா!

ரங்கு: எல்லாம் பத்திரமாயிருக்கு. சாயந்தரமா வந்து வாங்கிண்டு போ. (போகிருன்.)

காட்சி-5

(ரங்கு பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருக்கிருன். அவன் பின்னுல் எதிர்வீட்டுச் சிறுமி கமலா வருகிருள்.)

கமலா: டேய் ரங்கு! எனக்கு இன்னிக்குப் பிறந்த நாள்.

ரங்கு: ஓகோ! அதனுல்தான் புதுசு போட்டுண்டிருக்கியா?

கமலா: ஆமாம்! இதோ இந்தப் பாவாடை, சட்டை இந்த வளையல், முத்து மணி எல்லாம் அப்பா பம்பாயிலிருந்து வாங்கிண்டு வந்தார். எப்படிடா இருக்கு?

ரங்கு: பாவாடையும் சட்டையும் நன்னுத்தானிருக்கு. ஆனுல்..

கமலா: என்னடா, 'ஆனுல்'ன்னு இழுக்கறே?

ரங்கு: நான் உண்மையைச் சொல்றேன். ஆனுல் நீ கோவிச்சுக்கப் படாது.

கமலா: சே! சே! நான் என்னிக்காவது கோவிச்சுண்டிருக்கேனு? உம்! சொல்லு!

ரங்கு: உன்னைப் பார்த்தால் அசல்..அசல்..

கமலா: உம்! சீக்கிரம் சொல்லு!

ரங்கு: நீ போட்டிருக்கிற வளையல், முத்து மணி, கட்டம் போட்ட பாவாடை, சட்டை, எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் அசல்..அசல்..குறத்தி மாதிரி இருக்கு.

கமலா: என்னது, என்னைக் குறத்தின்னு திட்டறே? இரு! இரு! எங்கப்பாவிடம் சொல்லி உன்னைப் பார்த்துக்கறேன்!

(கோபமாகப் போகிருள்.)

ரங்கு: அட ராமா! உண்மையைச் சொன்னுல் எல்லோரும் எப்படிப் பாய்கிருர்கள்! உண்மைக்கு உலகத்திலே மதிப்பே கிடையாதா?

காட்சி-6

இடம்: பள்ளிக்கூடம். 4-ஆம் படிவம்.

(ஆங்கில வகுப்பு. ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருக்கிருர். கடைசிப் பெஞ்சியில் ரங்கு ஏதோ எழுதிக்கொண்டிருக்கிருன்.)

ஆசிரி: டேய் ரங்கு! அங்கே என்ன செய்யறே?

ரங்கு: எழுதிண்டிருக்கேன் சார்!

ஆசிரி: நான் சொல்லுவதில் முக்கியமானதை யெல்லாம் குறிச்சிண்டிருக்கியா? கெட்டிக்காரப் பயல்!

மணி: (ரங்குவிடம் மெதுவாக) டேய்! ஆமாம்ன்னு சொல்லிட்டுப் பேசாமலிரு. இல்லேன்னா ஆபத்து!

ரங்கு: (மெதுவாக) போடா! நான் இனிப் பொய்யே பேசப் போறதில்லை! (உரக்க) இல்லே சார்! கதை எழுதிண்டிருக்கேன்!

ஆசிரி: என்னது, கதை எழுதறியா?

ரங்கு: ஆமாம் சார்! நீங்க நடத்துகிற பாடம் சரியாகப் புரியல்லே. அதனாலே சும்மா இருப்பானேன்னு ஒரு சின்னக் கதை எழுதறேன் சார்!

ஆசிரி: ஆ! நான் நடத்தறது புரியல்லையா? எப்படிடா புரியும்? கவனிச்சால்தானே புரியும். கதை எழுதினா எப்படிப் புரியும்னு கேக்கறேன்!

(ஆசிரியர் பிரம்பால் அவனை அடிக்கிறார்.)

ரங்கு: (அலறுகிறான்) ஐயையோ! இல்லே சார்! இனிமே இல்லே சார்!

(இந்தக் கதறலைக் கேட்டு அவன் தாய் அவனை எழுப்புகிறாள்.)

அம்மா: ஏண்டா ரங்கு! ஏண்டா இப்படிக் கத்தறே? கனவு கினவு கண்டாயா என்ன?

அப்பா: சரிதான்! ராத்திரியிலே அலறுவது போதாதுன்னு பகலிலும் அலறுவதற்குத் தூங்க ஆரம்பிச்சுட்டாஞ? எழுந்திருடா தூங்கு மூஞ்சி!

(ரங்கு மலர மலர விழிக்கிருன்.)

அக்கா: பள்ளிக்கூடம் முடிஞ்சு வீவுகூட விட்டாச்சு. இன்னும் உங்க வாத்தியார் உன்னே விடவில்லே போலிருக்கு! சொப்பனத்திலேகூட வந்து பயமுறுத்துகிருரே: நல்ல வாத்தியார்!

ரங்கு: அட! எல்லாம் கனவா? நல்ல வேளே! (தன் மனத்திற்குள்) எல்லாவற்றிற்கும் உண்மையே பேசறதுன்னு வச்சுண்டால் ஒன்றும் நடக்காது. உண்மையே பேச ஆரம்பித்தால் ஊரெல்லாம் பகையாயிடும். தீமை தராத பொய் பேசுவதனுல் ஒன்றும் கெட்டுப் போயிடாது. பொய் பேசி ஒருவருக்கும் தீங்கு இழைக்கக்கூடாது. அவ்வளவுதான்.

அம்மா: எழுந்து வந்து காபியைக்குடி. அப்புறம் விட்ட இடத்திலிருந்து கனவு காணலாம்! எழுந்து வா!

அக்கா: டேய் ரங்கு! இந்தக் கிளி எப்படி இருக்கு?

ரங்கு: (முதலில் திடுக்கிடுகிருன். பிறகு சமாளித்துக்கொண்டு) அக்கா! இது நூலிலே போட்ட கிளி மாதிரியே இல்லே!

அக்கா: அப்படீன்னு?

ரங்கு: அப்படீன்னு நிஜக்கிளியே வந்து உட்கார்ந்திருக்காப்போல இருக்கு.

அக்கா: கெட்டிக்காரன்! (தட்டிக் கொடுக்கிருள்)

மாமி: டேய் ரங்கு!

ரங்கு: அட! மாமியா? எப்ப வந்திங்க?

மாமி: இப்பத்தான் வந்தேன். இந்தா.

ரங்கு: என்னது, மைசூர்ப்பாகா?

மாமி: எப்படிடா கண்டு பிடிச்சே? இந்தா, எப்படி யிருக்குன்னு ருசி பாரு!

ரங்கு: நீங்க செய்ததுகூட நன்னு இல்லாமல் போயிடுமா? அமிர்தம் போலன்னு இருக்கும்! இருக்கட்டும்! நான் அப்புறம் சாவகாசமா வந்து ருசித்துச் சாப்பிடறேன்! இப்ப கொஞ்சம் வேலேயிருக்கு!

மாமி: (மகிழ்ச்சியுடன்) ரங்குவுக்கு மாமி மேலே அலாதி அன்பு! இல்லேடா ரங்கு!

ரங்கு: ஆமாம் மாமி!

(வேகமாக வெளியேறுகிருன்.)

கோவலன் - கண்ணகி

கோவலன் கண்ணகி கதை எல்லாருக்கும் தெரிந்த சிலப்பதிகாரத்துக் கதை. எத்தனேயோ ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் பிரசித்தமாக இருக்கும் கதை. இந்தக் கதையைச் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையில் தெளிவாகவும் சுவையாகவும் படித்து அறிந்து ரஸிக்கும் வகையில் ஆசிரியர் எழுதியிருக்கிருர். கதையை அத்தியாயம் அத்தியாயமாகப் பிரித்து, பொருத்தமான தலேப்புக்களிட்டிருப்பதால் தொடர்ச்சியும் வேகமும் கொண்டு விளங்குகிறது கதை. அங்கங்கே கடினமான பதங்களுக்குப் பொருளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாரும் படிக்கக்கூடிய இனிய புத்தகம் இது.

ஏ. எஸ். பி. ஐயர், எம். ஏ., ஐ. ஸி. எஸ். எழுதியது. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலே ரூ. 1 - 8 - 0.



ஏழு கோபுரப் புதையல்

சசிதேவி

பாரசீகத்தில் பாக்தாத் என்னும் பெரிய நகரத்தின் தோட்டத்தில் பாறையிலேயே வெகு தூரம் குடையப்பட்ட கிணறு ஒன்று இருந்தது. அதன் நீர் பனிக்கட்டியைப் போல் குளிர்ச்சியாயும் தெளிவாகவும் இருந்தது. சிலர் பெரிய பாத்திரங்களில் தண்ணீரை நிரப்பி, தங்கள் தோள் மீதும், கழுதைகளின் முதுகிலும் வைத்து நகரத்தினுள் எடுத்துச் சென்று விற்பார்கள். இவர்களுள் ஒருவன் ஹரூன். ஹரூன் நாணயமானவன்; கடுமையான உழைப்பாளி. எப்போதும் சந்தோஷமாக இருப்பான்.

கோடையில் ஓர் இரவு. ஹரூன் கடைசியாகத் தன்னந்தனியாகக் கிணற்றுக்குச் சென்று கொண்டிருந்தான். அங்கே ஓர் அரேபியன் மேடையின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன், ''நான் ஒரு நோயாளி. என்னை நகரினுள் அழைத்துப்போனுயானல் தண்ணீர் விற்றுச் சம்பாதிக்கும் பணத்தைவிட அதிகப் பணம் தருகிறேன்'' என்ருன் ஹரூனிடம்.

ஹரூன் அரேபியனின் நிலைக்காக இரங்கினன். ''மனிதத் தன்மையுள்ள எவரும் செய்யவேண்டியது தானே! இதற்காகக் காசு, பணம் பெறமாட்டேன்'' என்று சொல்லி அந்த மனிதனைக் கழுதையின் மேல் உட்காரவைத்து, கீழே விழாமலிருக்க அவனைப் பிடித்தபடியே, மெதுவாகக் கழுதையை ஓட்டினன்.

நகரினுள் சென்றதும் ஹரூன்,- ''எங்கே போகவேண்டும்?'' என்று கேட்டான். ''நான் இவ்வூருக்குப் புதியவன். எனக்கு வீடு கிடையாது. இன்றைய இரவை உன் வீட்டிலேயே கழிக்க அநுமதி..'' என்று இழுத்தான்.

ஹரூனும் நோயாளியின் வேண்டுகோளை நிராகரிக்க மனமில்லாமல் அழைத்துச் சென்ருன். ஹரூனின் மனைவி கர்வம் பிடித்தவள். தான் அழகி என்ற பெருமையால் கணவனையோ, குழந்தைகளையோ கவனிக்க மாட்டாள். விருந்தாளியைக் கண்டதும், ''அந்நிய மதத்தானை இவ்வளவு நேரம் கழித்து வீட்டிற்கு அழைத்து வந்திருக்கிருயே. அதற்காக நம் குலம் நம்மைத் தண்டிக்கும்'' என்று கூச்சலிட்டாள்.

முதன் முறையாக ஹரூன் தன் மனைவியின் வார்த்தைகளுக்குச் செவி சாய்க்கவில்லை. வீட்டின் ஒரு பக்கத்தில் தன்னிடமிருந்த ஒரு படுக்கையில் அரேபியனைப் படுக்க வைத்தான்.

சிறிது நேரத்தில் அம்மனிதனின் நிலைமை மோசமாகி விட்டது. ''நான் இன்னும் சிறிது நேரத்தில் இறந்துவிடுவேன். உனது இரக்கச் செயலுக்குப் பிரதியாக இந்தப் பெட்டியை உனக்கு அன்பளிப்பாகக் கொடுக்கிறேன்'' என்று தன்னிடமிருந்த சந்தனப் பெட்டி ஒன்றை ஹரூனிடம் நீட்டினன்.

''அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் இன்னும் அதிக ஆண்டுகள் வாழ்ந்திருந்து உங்கள் சொத்தை அநுபவிக்கும்படியாகக் கடவுள்

கிருபை செய்வார்'' என்றான் ஹரூன்.

அரேபியன் தன் கையைப் பெட்டியின் மேல் வைத்து ஏதோ கூற வந்தான். ஆனால் அதற்குள் மூச்சு இழுத்து இறந்துவிட்டான். ஹரூனின் மனைவி இப்போது பைத்தியக்காரியைப்போல் ஆகிவிட்டாள். ''எல்லாம் உன் கருணையால் வந்த வினை. இந்தப் பிணத்தை நம் வீட்டில் யாராவது பார்த்தால் என்ன நடக்கும்? ஜெயிலுக்குப் போக வேண்டியதுதான்'' என்று கூச்சலிட்டாள்.

ஹரூனும் வருத்தப் பட்டான். 'சட்'டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''இன்னும் பொழுது விடியவில்லை. இந்தப் பிணத்தை எடுத்துக்கொண்டு போய் ஆற்று மணலில் புதைத்து விடுகிறேன். அந்த மனிதர் நம் வீடு வந்தது யாருக்கும் தெரிய வேண்டாம்.''

புருஷனும் மனைவியுமாகப் பிணத்தைக் கழுதையின் மேல் வைத்தனர். ஹரூன் ஆற்றுக்குப் போனான். ஆனால் துரதிருஷ்டம் குறுக்கிட்டது. எதிர் வீட்டில் ஒரு நாவிதன் வசித்து வந்தான். அவனுக்குப் பிறர் விஷயங்களில் தலையிட்டு வம்பு செய்வதில் ரொம்பவும் ஆசை.

இவன் ஹரூனின் வீட்டிற்கு அரேபியன் வரும்போதே கவனித்தான். இது மிகவும் விசித்திரமாகப் படவே அவன் நிமிடத்திற்கொருமுறை வாசலில் வந்து நின்று எதிர் வீட்டில் என்ன நடக்கிறது என்று கவனித்து வந்தான். சூரியோதயத்திற்கு முன் ஹரூன் கழுதையின் மேல் பாரமொன்றை ஏற்றிக்கொண்டு செல்வதைக் கண்டதும் ஆவல் அதிகமாகி, அவனறியாது பின்தொடர்ந்தான். பிணத்தைப் புதைப்பதையும் பார்த்துவிட்டான்.

மறுநாள் வழக்கம் போல அவன் அவ்வூர் நீதிபதிக்கு நாவிதம் செய்யச் சென்றான். வேலையைச் செய்யும்போதே தன் வம்பை அவிழ்த்துவிட்டான்.

தான் பார்த்ததை ஒன்று விடாமல் கைச் சரக்குடன் சேர்த்துக் கூறினான் நாவிதன். அந்த நீதிபதி ஒரு பேராசைக்காரன். பணமென்றால் போதும். ஹரூனைத் தன் கழுதை சகிதம் அழைத்து வர உத்தரவு செய்தான்.

''அயோக்கியனே! உன் விஷயமெல்லாம் எனக்குத் தெரியும். பொய் புளுகாதே. கொல்லப் பட்டவன் அந்நிய மதத்தான். எனவே நீ செய்ததில் தவறொன்றுமில்லை. நான் உன்னை மன்னித்துவிட்டேன். ஆனால் அவனிடமிருந்து நீ என்ன பொருள் எடுத்துக் கொண்டாயோ, அதைக் கொடுத்துவிடு. இவ்விஷயம் வெளியில் வராது!''

ஹரூன் பயந்து நடந்ததைக் கூறினான். அரேபியன் கொடுத்த சந்தனப் பெட்டியையும் கொடுத்துவிட்டான்.

அப்பெட்டியைத் திறந்த நீதிபதி அரேபிய எழுத்துக்களால் நிரப்பப்பட்ட ஒரு தோலையும், மெழுகுவத்தித் துண்டு ஒன்றையும் தவிர வேறொன்றும் காணாமல் ஏமாந்தான். இதில் தனக்கு லாபமெதுவுமில்லை என்று கண்ட நீதிபதி ஹரூனை விடுவித்துவிட்டான்; சந்தனப் பெட்டியையும் கொடுத்துவிட்டான். ஆனால் கழுதையைத் தன்னிடமே வைத்துக் கொண்டான்.

''நீதிபதியாம் நீதிபதி! கொடுங்கோலன். ஏழையின் சிறந்த நண்பனைப் பிரித்து விட்டானே, பாவி. என் சிநேகிதா! உன் பழைய எஜமானனை உனக்கு நினைவிருக்கிறதா?'' என்று கழுதையை நினைத்துப் புலம்புவான் ஹரூன்.

''எல்லாம் உன்னால்தான் வந்தது'' என்று ஏசுவாள் அவன் மனைவி. அவள் குழந்தைகள் ஏதாவது கேட்டால், ''உங்கப்பாவை அரேபியனின் பெட்டியிலிருந்து பணம் எடுத்துக் கொடுக்கச் சொல்லு'' என்று கேலி செய்வாள்.

ஒரு நாள் ஹரூனால் தொல்லைகளைப் பொறுக்க முடியாமல், தண்ணீர் விற்கும்போது ஓர் அரேபியனின் கடைக்குச் சென்று அந்தக் கடைக்காரனிடம் அந்தப் பெட்டியிலிருந்த தோலில் என்ன எழுதி

யிருக்கிறதென்று கேட்டான். அதைப் படித்த கடைக்காரன், ''இது ஒரு பிரார்த்தனை. இதைப் படித்ததும் மறைந்திருக்கும் புதையல் தென்படும். இது மிகவும் சக்தி வாய்ந்தது'' என்று கூறினான்.

''உண்மையாகவா! கிணற்றங் கரையில் நேற்றுப் பல பேர்கள் உட்கார்ந்து பேசிக்கொண் டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும் 'ஏழு கோபுரங்கள்' என்ற கட்டடத்திற்குக் கீழே அரேபியர்கள் நிறையப் புதையல்களை வைத்திருப்பதாக ஒருமுகமாகக் கூறினர். எனவே நாம் அங்கே செல்வோம். இது பொய்யானால் நமக்கு ஒன்றும் நஷ்டமில்லை. உண்மையானால் கண்டு பிடிக்கும் செல்வத்தை நமக்குள் பங்கிட்டுக்கொள்வோம். உனக்கு அரேபிய பாஷை தெரியும். எனவே முயற்சிப்போம்'' என்றான் ஹரூன்.

''பொறு. இந்தப் பிரார்த்தனை நடுநிசியில் இதற்கென்றே தயாரிக்கப்பட்ட மெழுகு வத்தியின் உதவியால் படிக்கப்பட வேண்டும். அந்த வத்தி இல்லாமல் இது உபயோகமில்லை.''

''அப்படியா! என்னிடம் இருக்கிறது அந்த மாதிரி வத்தி. இதோ கொண்டு வருகிறேன்'' என்று வீட்டிற்குச் சென்று சந்தனப் பெட்டியிலிருந்த வத்தியை எடுத்து வந்தான். ''இது தான் அந்த வத்தி. இது எரியும் போது எவ்வளவு பெரிய சுவர்களும், பாறைகளும் மிகவும் ரகசியமான குகைகளும்கூட வழிவிடும். ஆனால் இந்த வத்தி அணையும் வரை ஒருவன் குகையில் தங்கி யிருப்பானே யானால், அவன் அங்கேயே புதைந்துவிட வேண்டியதுதான்'' என்று விளக்கினான் அரேபியன்.

அவர்கள் இருவரும் அன்றிரவே பயணம் புறப்பட்டு மலை ஏறி 'ஏழு கோபுரங்களை' அடைந்தனர். கோபுரத்தின் அடியிலிருந்த குகையின் முன் வந்து சேர்ந்தனர். பாறையொன்றில் வெட்டப்பட்டிருந்த படிகளின்மூலம் அவர்கள் ஒரு காலியான அறையை அடைந்தனர். ஒன்றன் கீழ் ஒன்றாயிருக்கும் நாலு குகைகளைக் கடந்தனர்;

நாலாவது குகையின் வாயிலில் நடு நிசியாகும்வரையில் காத்திருந் தனர்.

நடு நிசி வந்ததும் வத்தியைக் கொளுத்தினர்கள். அரேபியன் பிரார்த்தனையைப் படித்து முடித்தான்; இடியோசையைப் போல் சப்தம் கேட்டது; தரை அதிர்ந்தது; பூமி பிளந்தது. அநேக படிகள் தெரிந்தன. இருவரும் அச்சத்துடனேயே இறங்கினர். கடைசியில் அரேபிய எழுத்துக்கள் நிறைந்த மற்ருெரு குகையை அடைந்தனர்.

அங்கே....

நடுவில் ஒரு பெட்டி. அதைச் சுற்றி ஏழு இரும்புத் தூண்கள். அந்தப் பெட்டியின் எதிரில் அநேக பானைகள் நிறையத் தங்கமும், வெள்ளியும், விலையுயர்ந்த கற்களும் காணப்பட்டன. கை கொண்ட மட்டும் எடுத்து அவரவர் பைகளை நிரப்பிக் கொண்டனர். ஏதோ சப்தம் கேட்ட மாதிரியிருந்தது. இருவரும் படிகளில் ஓடி ஏறி மேல் குகைக்கு வந்தனர். வத்தியும் அணைந்தது. உடனே பூமி இடியோசையுடன் மூடிக்கொண்டது. இருவரும் கட்டடத்தை விட்டு வெளி வந்து புல் தரையில் உட்கார்ந்து செல்வத்தைப் பங்கிட்டுக் கொண்டனர். ஒருவர் வத்தியையும் மற்றவர் தோலையும் எச்சரிக்கயாக எடுத்துக் கொண்டனர்.

''நண்பா! இது மிகவும் ரகசியமானதொரு சம்பவம். நீதிபதிக்குத் தெரிந்தால் அவ்வளவுதான்'' என்ருன் அரேபியன்.

''பயம் வேண்டாம்; நான் வெளியிடமாட்டேன்.''

''உன்னைப்பற்றிச் சந்தேகமில்லை. ஆனல் உன் மனைவி....''

''அவளும் அறியாதபடி ரகசியமாய் வைத்திருப்பேன்'' என்று உறுதி கூறினுன் ஹரூன். அவன் வீட்டிற்கு வந்தவுடன் அவன் மனைவி ஆரம்பித்துவிட்டாள் பல்லவியை. ''மறுபடியும் நேரம் கழித்து வர ஆரம்பித்து விட்டாயா? ஏன் இன்று ஓர் அரேபியனும் வரவில்லையா இரவு தங்க? என் தலைவிதி! என் கணவன் ஒரு வேலையும் செய்வதில்லை. தெருத்தெருவாய் அரேபியர்களுடன் சுற்றுவதுதான் அவன் வேலை. குழந்தைகளே! இனி நாம் பிச்சையெடுக்க வேண்டியதுதான்!''

மனைவியின் வார்த்தைகள் ஹரூனின் மனத்தை நெகிழ வைத்துவிட்டன. தன் பையிலிருந்து ஐந்நூறு பொற்காசுகளை எடுத்துக் கொடுத்தான். அவள் கழுத்தில் போட்டுக்கொள்ள நகையொன்றும் கொடுத்தான். ''இதென்ன, நீ மனிதர்களைக் கொலை செய்துவிட்டு, கொள்ளையடிக்க ஆரம்பித்துவிட்டாயா? ஐயோ! உன் புத்தி ஏன் இப்படிப் போகிறது?'' என்று மறுபடியும் புலம்ப ஆரம்பித்துவிட்டாள் அவள்.

என்ன செய்வான் ஹரூன்? மனைவியைச் சமாதானப் படுத்த வேண்டி, முழுக் கதையையும் கூற வேண்டியதாகிவிட்டது. முதலில் சத்தியம் வாங்கிக்கொண்டான், எவரிடமும் இந்த ரகசியத்தை வெளியிடுவதில்லையென்று. அவள் மகிழ்ச்சி எல்லை கடந்து சென்றது: ''இதோ பார், இனிமேல் என்னைப் பிறருக்கு உதவி செய்வதற்காக ஏசாதே'' என்ருன் ஹரூன்.

ஹரூன் அன்றிரவு நன்ருக உறங்கினுன். அந்தச் சமயம் அவன் மனைவி அவன் பையிலிருந்து எல்லா நகைகளையும் பணத்தையும் எடுத்துவிட்டாள். மறுநாள் ஹரூன் ஒரு பொன் நாணயத்தைக் கொண்டு போய் ஒரு கடையில் விற்ருன்: எங்கிருந்தோ கண்டெடுத்ததாகக் கூறினுன். அதன் உண்மையான மதிப்பில் மூன்றில் ஒரு பங்குதான் கிடைத்தது. இந்தப் பணத்துக்குப் புதிய துணிகள், விளையாட்டுச் சாமான்கள் வாங்கினுன். அன்று எல்லோரும் நன்ருகச் சாப்பிட்டுவிட்டு ஆனந்தமாக இருந்தனர்.

அவன் மனைவிக்குத் தலைகால் புரியவில்லை. தன்னை ஒரு பெரிய ராணி என்று எண்ணிக்கொண்டாள். ஹரூன் கொண்டுவந்த நகைகளைப் போட்டுக் கொண்டாள். அந்த அறையின் மேலும் கீழுமாய் உலாவினுள்; உடைந்த கண்ணுடியில் தன்னழகைப் பார்த்துக் கொண்டாள்; அடிக்கு ஒரு தடவை

ஜன்னலருகில் வந்து எட்டிப் பார்த்தாள். தெருவில் போவோர் வருவோரெல்லாம் அவளைக் கண்டு அதிசயித்தனர்.

வாசலில் நின்றுகொண் டிருந்த நாவிதன் இதைப் பார்த்துவிட்டான். உடனே நீதிபதியிடம் ஓடினுன். விஷயத்தைச் சொல்லிவிட்டான். இரண்டாம் முறையாக ஹரூன் நீதிபதியின்முன் நிறுத்தப்பட்டான்.

''மிகவும் நன்ருயிருக்கிறது உன் வேலே. அந்த அரேபியன் ஒரு காலிப் பெட்டியைத் தவிர வேருென்றும் தரவில்லை என்ருயே. இப்போது உன் மனேவி அணிந்திருக்கும் நகைகள் எங்கிருந்து வந்தன?''

மிகவும் பயந்துபோன ஹரூன் செல்வம் வந்த விதத்தைக் கூறிவிட்டான். அந்தக் கடைக்காரனும் அழைத்து வரப்பட்டான். ஹரூனைப் பார்த்ததும் அவன் எல்லா விஷயங்களேயும் அறிந்துகொண்டான். 'முட்டாளே! மனேவியிடம் சொல்லாதே என்று சொன்னதை மறந்துவிட்டாயா?' என்று அவனது மனம் பொருமியது.

கடைக்காரனுடைய கதையும் ஹரூனுடையதைப் போலவேயிருந்தது. ஆனல் நீதிபதியோ அதை நம்பாததுபோல நடித்தான். ''எங்களைச் சிறையில் தள்ளுவதற்கு முன் யோசியுங்கள். எங்களிருவரைத்தவிர வேறு யாருக்கும் இது விஷயம் தெரியாது. அந்தக் குகையில் நாமெல்லோரும் பணக்காரர்கள் ஆவதற்கு வேண்டிய பணம் இருக்கிறது. சரிசமமாகப் பங்கிடுவதாக வாக்களியுங்கள். மறுத்தால், அந்தக் குகை எப்போதும் மூடப்பட்டே யிருக்கும்'' என்ருன் கடைக்காரன்.

''எதை வேண்டுமானுலும் வாக்களியுங்கள். செல்வம் கைக்கு வந்தபின் இவர்களைத் தொலைத்துவிடலாம்'' என்று யோசனை கூறினுன் நாவிதன்.

அன்றிரவு நீதிபதி, நாவிதன், ஹரூன், அரேபியன் நால்வரும் நாலாவது குகைக்கு வந்தனர்.

வத்தி ஏற்றப்பட்டது; பிரார்த்தனை படிக்கப்பட்டவுடன் பூமி பிளந்தது. முன்போலவே ஹரூனும் அரேபியனும் உள்ளே சென்று, கற்களாலும், தங்கக்கட்டிகளாலும் நிரம்பப்பெற்ற இரு பெரிய பானைகளைத் தூக்கிவந்தனர். மற்ற இருவரும் உள்ளே செல்லத் தயங்கினுர்கள்.

''இன்னும் உள்ளேயிருக்கிறதா?'' என்ருன் நீதிபதி.

''இதைப்போல பதினுயிரம் மடங்கு இருக்கிறது.''

''அதையும் கொண்டு வரவேண்டும்.''

''என்னுல் முடியாது. எனக்கு இது போதும்'' என்ருன் கடைக்காரன். ''இதற்குமேல் என்னுல் பாரம் சுமக்க முடியாது'' என்ருன் ஹரூன். தன் உத்தரவு பயன் தராததைக் கண்ட நீதிபதி நாவிதனை அழைத்துக்கொண்டு உள்ளே சென்ருன்.

அவர்கள் உள்ளே நுழைந்தார்களோ இல்லையோ, அரேபியன் வத்தியை அணைத்துவிட்டான். பூமி இடியோசையுடன் மூடிக்கொண்டது. பிறகு ஹரூனைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியே வந்தான். ''என்ன காரியம் செய்தாய்? அவர்கள் இருவரும் உள்ளேயே அடைபட்டுவிட்டார்களே'' என்று கூச்சலிட்டான் ஹரூன்.

''கடவுளின் விருப்பம் அது'' என்று கூறி, வத்தியையும் தோலேயும் காட்டில் எறிந்துவிட்டான்.

இருவரும் நகரத்திற்கு வந்து செல்வத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு சுகமாக வாழ்ந்தனர்.

நீதிபதியும் நாவிதனும் 'உன்னுலே நான் கெட்டேன்; என்னுலே நீ கெட்டாய்' என்று 'ஏழு கோபுரங்க'ளிலேயே அடைபட்டுப் போனுர்கள்.

பாசம்

கி. சாரங்கராஜன்

ஜணஜணவென்று ஜாலரா முழங்கியது. உடனே வாட்ட சாட்டமான ஒருவன் சிவப்பு வெல்வெட் அங்கி அணிந்து ஓடி வந்து அரங்கின் நடுவிலே நின்ருன். கரகோஷம் காதுகளைத் துளைத்துத் தாக்கியது. கந்தையாவின் தீரச் செயல்களைப் பார்க்கப்போகும் ஜனங்களின் மனக்களிப்புக்கு ஈடேது, இணையேது?

நடக்கவிருக்கும் நிகழ்ச்சி ஆட்டத்தின் சிகரம் போன்ற 'தீக்குதிப்பு,' கந்தையா மேலே ஏணியில் ஏற, வாத்தியங்கள் ஒன்று சேர்ந்து பின்னணியைப் பின்னின. அவற்றின் தாளத்திற்கேற்ப 'டடம் டடம்' என்று விட்டு விட்டு முரசுகள் முழங்கின.

கந்தையா மேலே போகப்போக, கூட்டத்தாரின் கழுத்தெல்லாம் மேல் நோக்கித் திரும்பின. பாதி-முக்கால் பாகம் ஏறிவிட்டான். தாள வாத்தியங்களின் ஓசை நின்றது. கிளாரினெட்டின் நாதம் மட்டும் உச்சஸ்தாயியில் தனியாக ஒலித்தது. ஜனங்கள் தங்களையே மறந்து மேலே மேலே போய்ச் சிறியதாகப் போய்க்கொண் டிருந்த அவன் உருவத்தையே வைத்த கண் வாங்காமல் கவனித்தனர்.

அதோ, மேல் தளத்திற்கு வந்து நின்றுவிட்டான். கீழே வட்டமான தொட்டியில் எரியும் தீ! கிளாரினெட்டின் ஒலி மேல்ஸ்தாயியிலிருந்து ஒரு சுழல் சுழன்று அதிவேகமாகக் கீழ்ஸ்தாயிக்கு வர, கந்தையா கீழே தீயை நோக்கிப் பாய்ந்தான்! மறுநிமிஷம் தொட்டியிலிருந்து வெளி வந்து நின்ருன். உடம்பில் ஈரத் துளிகள் பளபளத்தன. சபையோர் பயம் நீங்கிப் பெருமூச்சுவிட்டு, கையைத் தட்டினர். வாத்தியங்கள் எல்லாம் சேர்ந்து வெற்றி முரசு கொட்டின. கொட்டகைக்குள்ளிருந்து எழுந்த சப்தம் வானை முட்டியது! கந்தையா சர்க்கஸ் பாணியில் வணக்கம் தெரிவித்து விட்டு உள்ளே போனுன்.

கந்தையாவுக்குக் கிடைத்த இந்தப் பாராட்டில் கலந்து கொள்ளாமல் பொருமைக் கடலில் தத்தளித்தது ஓர் உள்ளம். அது யாருடையது..?

கிளாரினட் ஊதும் சின்னப்பனின் எண்ணம் ஏதோ ஒரு திக்கிலே ஓடிக்கொண் டிருந்தது. 'முட்டாள் ஜனங்கள்! என் சங்கீதம் இல்லாமல் இந்தக் காட்சிக்கு

ஏது மகிமை? என் வாசிப்பால் தானே இவர்கள் உள்ளங்களைப் பிழிந்து விடுகிறேன். எங்கிருந்தோ வந்த பயல்....கந்தையாவாம் .... கத்தரிக்காய்! ஹூம். இப்படி அடிக்கிறது யோகம். இவன் பின்னாலேயே குழைகிறார் அப்பா. ஒரு வருஷம் முன்னால் இதே அப்பா, 'சின்னா, நீயும் இதே பிழைப்பிலே வந்துட்டே. உனக்கும் நுணுக்கமெல்லாம் தெரிஞ்சிருக்கு. இந்த வருஷம் போகட்டும். அப்புறம் உன்னை என் காரியதரிசியாகப் போட்டுக்கறேன். அப்படியே ரெண்டு வருஷத்தில் என் ஸ்தானத்திற்கு வந்துடலாம்' என்று சொன்னாரே. அவருக்கு என்ன ரெண்டு நாக்கா? கந்தையா நேற்றிலிருந்து அவருடைய காரியதரிசியாமே! அவன் பிழைப்பே என் கையில்தான் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளட்டும். என் ஒத்துழைப்பு இல்லாவிட்டால், அவன் ஆட்டமே ஆட்டம் கண்டு விடும்....'

அதே சமயத்தில் கந்தையாவுக்கும் மானேஜரான அவனுடைய மாமாவுக்கும் பலத்த வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

''வேண்டாம் கந்தா, காரியதரிசி வேலையை மட்டும் ராஜிநாமா செய்துவிடு. இத்தனை நாள் வளர்த்து உன்னை ஆளாக்கியிருக்கிறவன், கெட்டதை உனக்குச் சொல்வேனா?''

''மாமா, முதலாளி அபிமானமா அந்தப் பதவியைக் கொடுத்திருக்கார். அவருக்கு என்மேலே என்ன அன்பு தெரியுமா?''

''ஆமாம் கந்தா, ஆனால் அவர் அன்பாயிருக்கிறது எத்தனை பேருக்குப் பொறாமையைத் தூண்டியிருக்கிறது தெரியுமா?''

''எல்லாம் தெரியும்.''

''தெரிஞ்சுமா வேலையை ஒப்புக்கொண்டே? மற்ற ஊழியர்கள் எல்லாரும் சேர்ந்து உன்னை அடிச்சுப் போட்டுட்டா என்ன செய்யறது?''

''உங்களுக்கு ரொம்பக் கவலை தான், மாமா. பொறாமை ஒத்தருக்கும் இல்லை. உங்களுக்குத் தான், 'ஏதுடா இது; நாம்ப வேலை வாங்கி வச்சவன் நமக்குச் சமமா பதவிக்கு வரானே' என்று பொறாமை'' என்றான்.

''நினைச்சேன் அப்பவே, நீ இப்படிச் சொல்லுவியோ என்று. பார் இந்த மொட்டைக் கடிதத்தை. எனக்கு எதுக்கு உன் மேல் பொறாமை!'' என்றார்.

கந்தையா படித்தான் அந்தக் கடிதத்தை:

''எங்களுக்குள் ஊழியனாக இருந்துவரும் உங்கள் மருமான் கந்தையா காரியதரிசி பதவியை ஒப்புக்கொண்டது எங்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு சக ஊழியன் கட்டளையிடுவது, அதை நாங்கள் செய்து முடிப்பதா? அவனைத் தயவு செய்து வேலையை ராஜிநாமா செய்யச் சொல்லவும். இல்லையானால் பல விபரீதங்கள் உண்டாகும்....''

இப்படிக்கு,
பதினான்கு சக ஊழியர்கள்.''

கந்தையா படபடப்பான குரலில், ''மாமா, இதுவும் உங்கள் வேலைதானா? இத்தனை தூரத்திற்கு நீங்கள் செல்வீர்கள் என்று எனக்குத் தெரியாதே'' என்றான்.

''உன்னிடம் அளவிலாப் பாசம் வைத்தவர் இப்படித்தான் செய்வார் என்று உன் எண்ணமா? ஏதோ உன் நலத்திற்காகத்தான்.''

''எனக்கு வரும் பெரும் பதவியை விடச் சொல்கிறீர்கள். பாசம் அல்ல மாமா இது; பொறாமை!'' என்று இடைமறித்தான் கந்தையா.

''சீ, நாவை அடக்கிப் பேசு. என் சொல்லைக் கேட்காவிட்டால் என் முகத்திலேயே விழிக்க வேண்டாம்.''

''உங்கள் பக்கமே நான் பார்க்கவில்லை. எனக்கு உங்கள் தயவு ஒன்றும் தேவையில்லை. கை, கால்கள் இருக்கின்றன; இதே சர்க்கஸ் கம்பெனியில் என்னால் இருக்க

முடியும்'' என்று கூறிவிட்டுச் சீக்கிரம் தனது அடுத்த நிகழ்ச்சிக்குத் தயாராகச் சென்ருன்.

வெறும் வேலைக்காரனுகச் சேர்ந்த கந்தையா மடமடவென்று மேல் பதவிக்குச் சென்று கொண்டிருப்பது பல ஊழியர்களுக்குப் பிடிக்கவில்லை. பொருமைக் கண்களோடுதான் பார்த்தார்கள். அவர்களில் சிலர் சேர்ந்துதான் மேற்படி மொட்டைக் கடிதத்தை எழுதினுர்கள். முதலாளி மகன் சின்னப்பனும் அவர்கள் மாதிரி பொருமுகிருன் என்று அவர்களுக்குத் தெரியாது.

அடுத்த காட்சியில் கந்தையா தலை கீழாக உஞ்சலில் ஆடவேண்டும். மறுபக்கத்திலிருந்து கோமாளியொருவன் தன் பக்கமுள்ள ஊஞ்சலை வீசுவான். கந்தையா ஒரே தாவாகத் தாவி, கோமாளியின் ஊஞ்சலில் மறுபக்கம் வந்து விடுவான்.

ஆரம்பித்தது ஆட்டம். தலை கீழாகக் கந்தையா தன் ஊஞ்சலில் வர, அதே க்ஷணத்தில் கோமாளியும் தன் ஊஞ்சலை வீசினுன். அப்பொழுது கீழே சின்னப்பனின் பொருமை உணர்ச்சி வசப்பட்ட உள்ளத்தின் அபஸ்வரம், குழலின் அபஸ்வரமாக வெளிப்பட்டது; ஸ்வரம் பேதமடைந்து கடூரமாக ஒலித்த அந்தக் கணத்தில் கந்தையாவின் ஊஞ்சலைப் பிடிக்க நீட்டிய கைகள் தடுமாறின. ஒரு கணம் வெற்று வெளியிலே ஆதாரத்தைத் தேடித் துழாவின.

மறு நிமிஷம், ''ஆ'' என்று கத்திக் கொண்டே கந்தையா கீழே விழுந்தான்.

சபையோரின் உள்ளங்கள் நடுங்கி, கைகால்கள் பதறின.

ஹோவென்று தம்மை யறியாமல் பெருத்த கோஷம் கிளம்பியது.

சின்னப்பன் தன் இடத்தை விட்டுப் பதறி ஓடி வருகையில் மானேஜர் கூடாரத்தினுள் நுழைந்து ஜனங்களை அமர்த்தினுர். துரிதமாக டாக்டர் வந்து பார்த்து, கந்தையா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டான். உயிருக்கு அபாயமில்லை என்கிற நல்ல செய்தியைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து ஆட்டம் நடக்கும் என்பதையும் அறிவித்துவிட்டு, மானேஜர் ஆஸ்பத்திரிக்கு விரைந்தார். முதலாளியின் மகன் என்ற ஹோதாவில் சின்னப்பனை எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளச் சொல்லிவிட்டுச் சென்ருர்.

சின்னப்பன் கெட்ட எண்ணம் கொண்டிருந்தானே தவிர, இத்தனை விபரீதமான செயல் அவன் மனத்தில் புகவேயில்லை. மிகவும் பயந்து விட்டான்; அவனுக்கு அப்பொழுது வேலையே ஓடவில்லை. இரவோடு இரவாக ஆஸ்பத்திரிக்குச் சென்ருன். கட்டுப் போட்டு மயக்க நிலையில் கிடந்த கந்தையாவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவன் பட்ட வேதனை அவன் நெஞ்சிலிருந்த பொருமையைப் பொசுக்கி விட்டது.

ஆஸ்பத்திரியிலிருந்து நேரே வீட்டிற்குச் சென்ருன்.

இரண்டு தினங்களில் அவன் கேட்ட செய்தி அவனது மனத்தில் பேரிடியென விழுந்தது. கந்தையாவின் முறிந்த கால் எலும்புகள் ஒட்டி வளர மறுக்கின்றன என்றும், அவன் ஆயுள் முழுவதும் ஊனமாக இருப்பான் என்றும் டாக்டர் சொல்லி விட்டார்.

பிறகு சமாசாரத்தைச் சொல்ல வீட்டிற்குச் சென்ருன். ஆனுல் அவன் தந்தைக்கு அது ஏற்கனவே தெரிந்திருந்தது.

''அப்பா, சமாசாரம் தெரியுமில்லே? பாவம், நம்ம கந்தையாவுக்கு இனிமேல் கால் சரி வராதுன்னு டாக்டர் சொல்லி விட்டார்!''

அவரும் 'பாவம்!' என்று தம் அநுதாபத்தைத் தெரிவித்தார்.

''ஹும், ஓடியாடற சர்க்கஸ் வேலை போயிட்டுது. பேசாமெ உன்னோட இருக்க வேண்டியதுதான்'' என்ருன் சின்னப்பன்.

''அதெல்லாம் எப்படி, சின்னு? அப்படியெல்லாம் பார்த்தால்

முடியுமா, நீயே சொல்லு. நம் தொழிலோ காலிலே சக்கரத்தைக் கட்டி விட்ட மாதிரி ஊர் சுத்தற பொளைப்பு. நொண்டிப் பிள்ளையைக் கட்டிக்கிட்டு எப்படி இளுத்தடிச்சுக்கிட்டு அலைய முடியும்?''

இந்தக் கூற்று சின்னப்பனை ஒரேயடியாகக் கலக்கிற்று, சம்மட்டியால் அவனை அடிப்பதுபோலிருந்தது.

'ஐயோ, கெடுத்தேனே பாவி. அவனுக்கு இனி வாழ்வே கிடையாதா? கால் போயிற்று, பதவியும் பணமும் போயிற்று. இனி, சிறிது நாட்களுக்குப்பின் —ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியதும் - அவன் உலகத்திற்கு ஒரு நொண்டிதானே! யார் வேலை தருவார்கள்? என் தவற்றுக்குப் பிராயச்சித்தம் கிடையாதா?'' என்று ஏங்கினான்.

மாலையிலே கந்தையாவைச் சின்னப்பன் பார்த்த போது, கந்தையா பேசின பேச்சு அவனைத் திகைக்க வைத்தது.

''நீ ஏன் தவிக்கிறே, சின்னு? இந்தத் தொழிலிலே இந்த அபாயம் எப்போதும் இருக்கிறது தானே! என் கஷ்ட காலம், நீ பாடுவது பிசகிப் போச்சு, என் கையும் தவறிச்சு'' என்றான்.

''ஆ, இத்தனை நல்லவனையா நாம் இப்படிக் கொடுமைப்படுத்தி யிருக்கிறோம்!'' என்று புழுவாகத் துடித்தான் சின்னப்பன்.

கடைசியாக அவனுக்கு ஒரு வழிதான் தோன்றியது. ஆம்! பணக்காரர்களுக்குரிய வழிதான் அவனுக்கும் உதயமாயிற்று! 'வாழ்க்கையில் சந்தோஷ மில்லா விட்டாலும், ஏழைமை என்னும் பிணி அவனைப் பிடித்து வாட்டக் கூடாது' என்பதற்காக அவனால் செய்யக் கூடிய ஒரே வழியை—பண உதவியை—செய்தான்.

அப்பொழுது சின்னப்பனைச் சமாதானப்படுத்தின கந்தையா தன் சர்க்கஸ் வாழ்க்கையே இருண்டுவிடும் என்று கண்டானா? பிறகு வந்த சின்னப்பனின் தந்தை, முதலாளி—மறை முகமாக நொண்டியாகி விட்ட அவனுக்கு, அவனிடத்திலே உள்ள அன்பும் முடமாகி விட்டது என்பதைத் தெரிவித்துவிட்டுச் சென்றபோது, அவன் பட்ட வேதனைக்கு அளவு எப்படிச் சொல்ல முடியும்? கீழே விழுந்தபோது உயிர் நீங்கி இருந்தால் இத்தனை துன்பமும் இல்லையே என்று ஏங்கினான்.

அன்று அவன் மாமா அவனைப் பார்க்க வந்ததும் துயரம் மேலிட்டது.

''மாமா—'' என்று கதறி அழுதான்.

''மாமா, என்னை மன்னித்து விடுங்கள், மாமா! உங்கள் முகத்தில் விழிக்கக்கூடாத பாபியாகி விட்டேனே. உங்கள் தயவே வேண்டாம் என்றேனே!.... உங்களைப் புண்படுத்திவிட்டேனே.. நொண்டி, மாமா நான், நொண்டியாகி விட்டேன். மன்னியுங்கள் மாமா—'' என்று அவரைக் கட்டிக் கொண்டு கதறி அழுதான்.

மாமாவின் கண் கலங்கி விட்டது. ''அழாதே கந்தா, நீ எப்படியிருந்தாலும், என் உயிருள்ள வரைக்கும் உன்னைக் கட்டாயம் காப்பாற்றுவேன்.''

''இந்த நொண்டியைக் கட்டிக் கிட்டு உனக்கு என்ன ஆகணும்?'' என்று மெதுவான குரலில் கேட்டான் கந்தையா.

''என்னவானாலும் நீ என் 'கந்தன்' தானே! சின்னப்பன் உன் பேரில் இரண்டாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறான், எனக்கும் இந்த ஊர் சுத்தற பிழைப்பு சுத்தமாப் பிடிக்கலே. நம்ம ஊரிலேயே ஒரு பலசரக்குக்கடை வெச்சு உன்னை உக்காத்திப்போடறேன். நானும் பக்கத்திலே எங்கேயானும் போய் உழைச்சுக் கொண்டாறேன். சரிதானே கந்தா?'' என்றார்.

அவரது மனத்திரையிலே இறந்துபோன தங்கையிடம் அவர் கொடுத்த வாக்குறுதி படம் போல விழுந்தது. 'என் உசிருள்ள வரை உன் பிள்ளையை மனம் கோணாமல் பார்த்துக் கொள்கிறேன்' என்று கையில் அடித்துச் சத்தியம் செய்திருந்தார். இனியும் சித்தமாக இருந்தார்.

துயரக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த அவனுக்குக் கை கொடுத்து உதவினாற்போல இருந்தது அவர் கூற்று! அவன் கண்களிலே புதிதாக நம்பிக்கை ஒளி வீசியது.

''சரி, மாமா'' என்றான் குழந்தையைப்போல!

அதிருஷ்ட எண்கள்

1-6-55 இதழில் பரிசு பெற்றவர்கள் விவரம்:

முதற் பரிசு ரூ. 15: பி. வெள்ளியங்கிரி, பீளமேடு.
2-ஆம் பரிசு ரூ. 10: கே. எஸ். முருகேசன், கூகலூர்.
3-ஆம் பரிசு ரூ. 5: டி. ஆர். ஹரிராம், மதுரை.
4-ஆம் பரிசு ரூ. 2: (1) எஸ். எம். வேங்கடசுப்பிரமணியன், ஹோசூர்.
(2) என். வடிவேல், உறையூர்.

கேளுங்கள், சொல்கிறேன்

பேராசிரியர் விஞ்ஞானம்

லோகநாதன், சிவராம்பேட்டை.

நாம் தந்தி அடித்தால், அது ஒரு மணி நேரத்துக்குள் போய்ச் சேருகிறது. அது எப்படி?

தந்தி என்பது மின்சாரத்தைத் துணையாகக் கொள்ளும் ஓர் ஏற்பாடு. மின்சாரம் மிகமிக வேகமாகச் செல்லக் கூடியது. ஆகையால் தந்தி அடிக்கும் ஊரிலிருந்து அனுப்பிய செய்தி கிட்டத்தட்ட ஒரு நொடிக்குள் தந்தி ஏற்கும் ஊருக்குக் கிடைத்துவிடுகிறது.

எம். பி. அழகனூர், போத்தனூர்.

செகண்டிலோ நிமிஷங்களிலோ போட்டோ எடுப்பதாகச் சொல்லுகிறார்களே. அது எங்ஙனம்?

போட்டோ எடுப்பது என்னும் அற்புதக் காரியத்தில் சூரிய ஒளியின் திறமை ஒன்றைப் பயன்படுத்துகிறோம். அதற்கு ஒளி-ரசாயன சக்தி (Photo - chemical effect) என்று பெயர்.

ஒளிக் கிரணங்களால் சிற்சில ரசாயனப் பொருள்களில் மாறுபாடுகள் நிகழ்கின்றன. அந்த விஷயத்தை அடிப்படையாகக் கொண்டதுதான் படம் பிடிக்கும் காரியம்.

முதன் முதலில் உபயோகித்த ரசாயனப் பொருள்கள் ஒளியால் மாறுதல் அடைவதற்கு அதிக நேரம் வேண்டியிருந்தது. அப்போது படம் பிடிக்கும் வேலை படம் பிடிப்பவருக்கும் கஷ்டம்; படம் பிடிக்கப் படுபவருக்கும் அதைவிடக் கஷ்டம். அசையாமல் சிறிதுநேரம் இருந்தால்தான் படம் சீராகப் பிடிக்க முடியும் என்று இருந்தது.

இப்பொழுது மிகச் சிறந்த ரசாயனப் பொருள்கள் பூசிய பிலிம்களை அமைக்கிறார்கள். கண் இமைப்பதற்குள் படம் பிடிக்க முடிகிறது. சில படங்கள் எடுப்பதற்கு நொடிப் பொழுதில் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரங்கூட வேண்டியதில்லை. விஞ்ஞான வளர்ச்சியே-அதாவது விஞ்ஞானிகளின் முயற்சியே—இவ்வகையான சிறந்த நிலைக்குக் காரணம்.

சி. என். தியாகராஜன், கோயம்புத்தூர்.

ரேடார் என்பது என்ன?

ரேடார் என்பது ஓர் ஆங்கிலச் சொல். அது சில சொற்களின் முதல் எழுத்துக்களால் அமைக்கப்பட்டது. அதில் உள்ள எழுத்துக்கள் R-A-D-A-R என்பவை.

இவற்றுள் R-A என்பவை ரேடியோ (Radio) என்னும் சொல்லின் முதல் இரண்டு எழுத்துக்கள். ரேடியோ என்பது கிரண வீச்சைக் குறிக்கும் சொல்.

D-என்பது டிடெக்ஷன் (Detection) என்னும் சொல்லின் முதல் எழுத்து. டிடெக்ஷன் என்றால் கண்டு பிடித்தல், துப்பறிதல் என்பது பொருள்.

A-என்பது அன்டு (And) என்னும் சொல்லின் முதல் எழுத்து. அன்டு என்பது உம் என்னும் தொகையைக் குறிக்கும்.

R-என்பது ரேஞ்ஜிங் (Ranging) என்னும் சொல்லின் முதல் எழுத்து. ரேஞ்ஜ் என்பது தூரத்தின் அளவைக் குறிக்கும்.

இந்தக் கருவியானது மின்காந்தக் கிரணங்களால் அல்லது அலைகளின் வீச்சினால் ஆகாய விமானங்கள், கப்பல்கள், கரைகள், பாறைகள் முதலியவை இருப்பதையும், அவற்றின் திசையையும், தூரத்தையும் கண்டு பிடிக்கும் திறமை உள்ளது.

பி. லக்ஷ்மிநாராயணன், புது டில்லி.

கார்க்கு யாரால் கண்டுபிடிக்கப் பட்டது? எப்போது?

தெரியாது என்பதுதான் நேரான விடை.

கார்க்கு என்பது ஒருவகை மரத்தின் பட்டையின் மேற்பகுதி, அல்லது வெளிப்பகுதி. இம்மரம் இயற்கையாகத் தென் ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்கக் கரையோரத்திலும் வளர்கிறது. இதன் உயரம் சுமார் 30 அடி.

இம்மரத்தை ஸ்பெயின், போர்த்துகல் தேசங்களில் விசேஷமாகப் பயிரிட்டு வளர்க்கிறார்கள். பண்டைக் காலத்தில் வாழ்ந்த கிரேக்கர்களுக்கும் ரோமானியர்களுக்கும் இதன் உபயோகங்களில் சிற்சில தெரிந்திருந்தன. அந்தக் காலத்திலேயே ஒயின் (Wine) என்னும் மதுவை வைத்திருந்த ஏனங்களின் மூடிகளாகக் கார்க்கு உபயோகப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

ஆனால் பதினேழாம் நூற்றாண்டின் கடைசியில்தான் கண்ணாடிச் சீசாக்களை மூடுவதற்குக் கார்க்கைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள். திரவங்களை வைப்பதற்குக் கண்ணாடிச் சீசாக்களை உபயோகப்படுத்தத் தொடங்கியது பதினைந்தாம் நூற்றாண்டில்தான் என்பது இங்கே நினைவிருக்கவேண்டும்.

இ. முத்துகிருஷ்ணன், பணகுடி.

ரெயில் தண்டவாளத்திலேயே போகக் காரணம் என்ன?

இந்தக் கேள்விக்கு இரண்டு பொருள்கள் இருப்பதுபோல் தோன்றுகிறது.

அதாவது, வண்டிகள் ரஸ்தாவில் போவதுபோல், தண்டவாளங்களின்மீது ரெயில் போகிறது. அதற்குக் காரணம் என்ன?—இது ஒரு கேள்வி.

ரஸ்தாக்கள் முதலிய சுரசுரப்பு அதிகமான இடங்களில் சக்கரங்கள் உருண்டு செல்லும்போது அவைகளுக்கு உராய்வு ஏற்படுகிறது. உராய்வினால் தடை ஏற்படுகிறது. வேகம் குறைகிறது. முயற்சிக்கு ஏற்ற பயன் கிடைப்பதில்லை. தண்டவாளங்கள் சுமாராக வழவழப்பான மேற்பரப்பை உடையவை; சக்கரங்களும் அப்படியே. ஆதலால் உராய்வு குறைகிறது.

இந்தக் கேள்விக்கு மற்றொரு விதமான பொருளும் இருப்பது போல் தோன்றுகிறது. ஒரு வேளை நீ நினைத்த பொருள் அதுவாகவே இருக்கலாம்.

அதாவது, தண்டவாளங்களின் மீது ஓடும் ரெயில் சக்கரம் ஏன் அவைகளை விட்டு விலகிப் போகாமல், அவைகளின் மீதே ஓடிவருகின்றன?—இது ஒரு கேள்வி.

ரெயில்வண்டிச் சக்கரங்களைக் கவனித்தால், அவைகள் சாதாரண இருப்புச் சக்கரங்களைப் போல் இருப்பதில்லை! அவைகளின் விளிம்பு வண்டிச் சக்கரங்களுக்குப் போட்டிருக்கும் இருப்புப் பட்டையைப்போல் மட்டமாக இருப்பதில்லை என்பது தெரியவரும். அந்தச் சக்கரங்களின் விளிம்பில் ஒரு புறமாக ஓர் உதடு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும். சக்கரத்தின் மட்டமான விளிம்புப் பகுதி தண்டவாளத்தின்மீது படிந்திருக்கும். அப்போது இந்த உதட்டைக் கவனித்தால், அது தண்டவாளத்துக்கு அடுத்தாற்போல், உட்புறமாக அதன் பக்கத்தைத் தடவிக்கொண்டு சற்றே தாழ்ந்திருக்கும்.

இந்த நிலையில் சக்கரம் தண்டவாளத்தின் உட்பக்கமாக நகர முடியுமே தவிர, வெளிப் பக்கமாக விலக முடியாது. அப்படி விலகுவதை இந்த உதடு தடை செய்யும்.

ரெயிலில் சக்கரங்கள் ஜதை ஜதையாக அமைந்திருக்கும், அல்லவா? ஒரு பக்கத்துச் சக்கரத்தின் உதடு அதை ஒரு பக்கமாக நகரவிடாது. அதன் எதிர்ப் பக்கச் சக்கரத்தின் உதடு அதை மறுபக்கமாக நகரவிடாது. ஆகவே ரெயில் இடது பக்கமாகவோ, வலது பக்கமாகவோ விலகாமல், தண்டவாளத்தின் மேல் சரியாக ஓடி வருகிறது.

சில வேளைகளில், ஏதோ குற்றம் குறை காரணங்களால், ரெயில் தண்டவாளத்தை விட்டு விலகுவதுண்டு. இது ஒரு விபத்து. இதற்கு டிரெயில்மெண்டு (Derailment) என்று பெயர்.

தே. பார்த்தசாரதி, மயிலாப்பூர்.

ஒரு குளத்தின் தோற்ற ஆழம் உண்மை ஆழத்தைவிடக் குறைவாகத் தெரிவது ஏன்?

இதற்கு ஒளி முறிவு (Refraction) என்னும் தத்துவமே காரணம். வாயு என்பதைப் போன்ற ஓர் ஊடகத்திலிருந்து (Medium) நீர் ஊடகத்துக்கோ, அல்லது இதற்கு நேர் மாறியோ, ஒளிக் கிரணம் செல்லும்போது, அது பலகாலும் திசை சற்றே விலகி முறிந்ததுபோல் காணும்.

நீரில் சாய்த்துச் செருகிய பென்சில் ஒடிந்ததுபோல் தோன்றுவதும், கிண்ணத்தின் அடியில் கிடக்கும் நாணயம் சாய்வாகப் பார்க்கும்போது சற்றே உயரத்தில் தோன்றுவதும், தெள்ளிய நீர்க் குளத்தின் ஆழம் குறைவாகத் தோன்றுவதும் இந்தத் தத்துவத்தினால்தான்.

ஒவ்வொரு பௌதிகப் பாட புத்தகத்திலும். ஒளியைப் பற்றிய பகுதியில் இது விளக்கமாகக் கூறப்பட்டிருக்கும்.

சே. வை. சத்திவேலு,
வடக்களூர்.

உயிர் என்று சொல்லுகிறார்களே, நாம் இறந்தவுடன் அவ்வுயிர் என்ன ஆகிறது? எங்கே போகிறது? தற்கொலை செய்துகொண்டால் அவர்கள் பேய் ஆகிறார்கள் என்பது உண்மையா?

உயிர் என்பதன் முழுத் தத்துவமும் இன்னும் விஞ்ஞானிகளால் அறியப்படவில்லை. உயிர் உள்ளவை என்ன என்ன செய்கின்றன என்னும் அறிகுறிகளைக் கொண்டே அவர்கள் உயிர் என்பது என்ன என்று ஒருவாறு சொல்லுகிறார்கள். இயக்கம், வளர்ச்சி, உண்ணல், இனம் பெருகல் ஆகியவை உயிரின் சில விசேஷப் பண்புகள்.

கீழ்த்தர உயிர்களை ஆராயப் போனால், மிக நுண்ணிய சிலவற்றைக் கவனித்தால் அவைகளை உயிர் உள்ளவைகளோடு சேர்க்க வேண்டுமா, உயிர் இல்லாதவைகளோடு சேர்க்க வேண்டுமா என்று உறுதிசெய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

உயிர் என்பது தனிப்பட்ட ஒரு பொருள் என்றோ அல்லது ஒரு சக்தி என்றோ கருத முடிவதில்லை. சிற்சில பொருள்களில் சிற்சில பண்புகள் காணப்படுமானால், அவைகளுக்கு உயிர் இருக்கிறது. அப்பண்புகள் அவைகளில் இல்லையானால் அவை உயிர் இல்லாதவை என்கிறோம்.

இவ்வளவுதான் விஞ்ஞானிகளால் சொல்ல முடிகிறது. ஆனால் தத்துவ ஞானிகள் உயிரைப் பற்றிப் பலவகையாகக் கூறுகிறார்கள்.

தற்கொலை செய்துகொள்வது மிகத் தவறான காரியம். அது சமூகத்தின் நன்னிலைக்கு விரோதமானது. ஆகையால், தத்துவ ஞானிகளும், நியாயவாதிகளும் சமயத் தலைவர்களும் தற்கொலை செய்து கொள்வது தவறு என்று கூறுகிறார்கள். அதைத் தடுக்கப் பல வகையான வழிகளைக் கையாளுகிறார்கள்.

சட்டப்படி, தற்கொலை செய்து கொள்ள முயலுபவன் ஒரு குற்றவாளி. அவனுடைய முயற்சி பலிக்காவிட்டால், அதாவது அவன் சாகாமல் பிழைத்துவிட்டால், அவனைத் தண்டிக்கலாம்: சிறைச்சாலைக்கு அனுப்பலாம். தற்கொலை செய்துகொள்ளத் துணை புரிந்தவனுக்குக் கடுங்காவலோ, மரண தண்டனையோகூட விதிக்கலாம்.

மதத்தின் கொள்கைப்படியும் தற்கொலை செய்து கொண்டவன் நரகத்துக்குப் போவான், அல்லது பேயாக ஆவான் என்றெல்லாம் சொல்லி, அதைத் தடுக்க முயலுகிறார்கள்.

‘பேய்’ என்பதாக ஒன்றும் கிடையாது என்று பெரும்பான்மை விஞ்ஞானிகளும் நம்புகிறார்கள். ஆனால் உருவம் அற்ற, உயிர் அற்ற அருவங்கள் (Ghosts) உண்டு என்றும், அவைகளைத் தாங்கள் கண்டிருப்பதாகவும், அவைகளோடு சம்பாஷணைகளை நடத்தியதாகவும் சில உள ஆராய்ச்சி (Psychic) சங்கங்கள் கூறுகின்றன. இந்த அருவங்களுக்கும் தீய செயல்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை.

பேய் என்பது இல்லை என்று நம்புவதே பொதுமக்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட மனநிலை.

பாலர் கவி அரங்கம்

காடு

1. மான்துள்ளும் - தென்றலிலே
மணக்கின்ற மலர்களிலே
தேன்சிந்தும் - நெடிதோங்கிக்
கனிகுலுங்கு மரமெல்லாம்
வான்முட்டும் - கிளிகள் கூட்டம்
கனிதின்று களிக்கின்ற
கானகமே உலகத்தில்
அழகுக் கோயில்!

2. காட்டினிலே நிறை அழகு
வீட்டிலேது? - நம்
நாட்டினிலே உளநலங்கள்
அங்கும் உண்டு.
மேட்டினிலே வளர்ந்த மரத்
துச்சியில் தேன்
கூடியிருக்க உணவுக்குப்
பஞ்சம் ஏது;

—ந. மெய்ப்பொருள்.

நேரு

('பிருந்தாவனமும் நந்தகுமாரனும்' என்ற மெட்டு)

ஜவஹர் உள்ளமும் எங்க ளுள்ளமும்
ஜகத்தினில் என்றும் மாறிடுமோ?
ஏனே தோழா இந்தச் சந்தேகம்
யார்தான் அவரை மறந்திடுவாரோ? (ஜவஹர்)
அமைதியைக் காத்திட நின்றதினுலே
உலகமே அவரைப் போற்ருதா?
அன்பதிலே சுடராகத் தாவினுல்
உலகே இன்பத்தில் மூழ்காதா?
நேருவின் தண்ணெளிச் செய்கையை நினைத்தால்
ரஷ்யா அணுக்குண்டை ஒழிக்காதா?
ஏனே தோழா, இந்தச் சந்தேகம்
யார்தான் அவரை மறந்திடுவாரோ? (ஜவஹர்)

—நெ. ம. மயில்சாமி.

பணியாட்கள் கூடாரங்கள் அமைப்பதில் முனைந்தார்கள்...
பூதூர்! அழகான கூடாரம்!
யார் அங்கே!
நாட்டியம் நடக்கட்டும். திராட்சை ரஸத்தை கொண்டு வரச் சொல்.
கட்டளை யிடுங்கள்!
கடும் நித்திரையில் ஆழ்ந்து போகிறார்கள்...

பொழுது விடிந்தது . . . .
என்னவோ இதனுள் ஜொலிக்கிறதே!
ஆ! ரோஜாவில் ரத்தினம்!
ஆ! ரோஜா!
கழுகு பறக்க, காமர் அதைத் தொடர்ந்து துரத்திச் செல்கிறான் . . . .
காடு, மேடு, மலை வனாந்தரங்களையெல்லாம் கடந்து கழுகு செல்லச் செல்ல, காமரும் அதை விடாது பின் பற்றிச் செல்கிறான்... இருட்டுகிற வரையில் துரத்திச் சென்று கடைசியில் களைத்துப்போய் ஒரு மரத்தடியில் படுத்தான்.

(தொடரும்)

லீடர் மணி

'ஆர்வி'

இந்த ஆறு ரூபாயை அரை நொடியில் செலவழிப்பது ஒரு பிரமாதமா? இஷ்டப்பட்ட இடத்துக்குப் போய் இஷ்டப் பட்டதை வாங்கிக் கொள்ளலாமே! அண்டுவார் அடக்குவார் யார்?

ஆனால் குப்புசாமி இருக்கிறானே! அவன் இல்லாவிட்டால் இந்தப் பணம் மணிக்குக் கிடைத்திருக்குமா? சம்பளம் என்று முதல் முதலாகக் கை நீட்டி வாங்கிய பணத்தை அவனிடம் கொடுப்பதல்லவா அவனுக்குக் காட்டும் நன்றியாகும்!

இந்த எண்ணம் தோன்றியதோ இல்லையோ மணி, குப்புசாமியைப் பார்க்கப் புறப்பட்டான். சலவை செய்து வைத்திருந்த டிராயரையும் சட்டையையும் எடுத்துப் போட்டுக் கொண்டான். அலங்காரம் செய்துகொள்ளும் அறையிலிருந்து வாசனைத் தைலத்தை எடுத்துத் தலையில் தடவிக்கொண்டான். நிலைக்கண்ணாடிமுன் நின்றுகொண்டு தலையை வாரிக் கொண்டான். அவன் முகமே அழகாக மாறியிருந்தது. பளிச்சென்று முகத்திலே நீரோட்டம் பாய்ந்து செழுமையாக இருந்தது. கண்கள் பளபளத்தன. சௌகரியமும் போஷாக்கும் இருந்தால் நோஞ்சல் பூனைகூட அழகாக மாறி விடாதா? மணிக்குத் தன்னைப் பார்த்துக் கொள்ளவே பெருமையாக இருந்தது.

சிறிது நேரம் அப்படியே பூரித்துப் போன நிலையில் நின்றான். திடீரென்று கண்ணாடியில் தனக்குப் பின்னாலிருந்து ஒரு முகம் தோன்றுவதை மணி கண்டான். அவன் வயதுள்ள சிறுவன் ஒருவன் முகத்தில் ஆவலும் புன்முறுவலும் நெளிய நின்றான்.

''நீதானே மணி என்ற பையன்?''

''ஆமாம்; நீ யாரு தெரியல்லியே.''

''நானா? நான் வந்து..முகுந்தன். இந்த வீட்டு அம்மா இருக்காபாரு, அந்த அம்மாவுடைய அக்கா பேரன். எனக்கு இந்த அம்மா சின்னப்பாட்டி.''

''உனக்கு என் பேரு எப்படித் தெரிஞ்சது! உங்க பாட்டி சொன்னாளா?''!

''ஆமாம். நான் சினிமாவுக்குப் போகணும். துணையில்லை. உன்னை அழைச்சிண்டு போகச் சொன்னா பாட்டி. அதனாலேதான் வந்தேன்.''

மணி சிறிது தயங்கினான். குப்புசாமியைப் பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் மெதுவாக மாறத் தொடங்கியது. சினிமா ஆசை மேலோங்கி வந்தது. குப்புசாமியை எப்பொழுதும் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நினைத்தபோது சினிமா பார்க்க முடியுமா?

முதலில் அவன் தயக்கத்துடன் தலையை ஆட்டினான்.

''நீ வர மாட்டியா?''

"இல்லே..அதுக்கு இல்லே.. ஆனா ஒருத்தரைப் பார்க்கப் போகலாமான்னு நினைச்சேன். அதுக்குத் தான் யோசனை பண்றேன்.."

"யோசனை ஒண்ணும் பண்ணாதே. உன்னை நான் கூட்டிண்டு போறேன். நீ காலணா செலவழிக்க வேண்டாம். என்ன? சட்டுனு கிளம்பு. இன்னும் கால் மணிதான் இருக்கு, படம் ஆரம்பிக்க. நேரு ரஷ்யாவுக்குப் போன ரீல்கூடக் காட்டறான். முக்கியமா அதைப் பார்க்கணும்" என்றான் முகுந்தன்.

மணிக்குச் சபலம் தட்டியது: அவன் எண்ணம் மெதுவாகத் தடம் புரண்டது. "சரி; நீ இவ்வளவு தூரம் சொல்றபோது என்ன செய்யறது? அம்மாகிட்டே சொல்விட்டு வந்துடறேன்!" என்று அவன் உள்ளே ஓடினான்.

சற்றைக்கெல்லாம் திரும்ப ஓடி வந்து, "ரைட்டோ! அம்மா போகச் சொல்லியாச்சு. இப்படியே கிளம்ப வேண்டியதுதான்" என்றான்.

முகுந்தனுக்காக அவர்கள் வீட்டு மோட்டார் வண்டி வந்திருந்தது. அதில் ஏறிக்கொண்டு இரண்டு பேரும் போனார்கள். முதல் முதலாக மோட்டார் சவாரி செய்த மணிக்கு இந்த உலகத்தில் இருப்பது போலவே இல்லை. ஸீட்டின் ஸ்பிரிங் மெத்தையில் எம்பி எம்பி உட்கார்ந்து குதித்தான். முகுந்தனே அவனுக்கும் சேர்த்து, பால்கனிக்கு டிக்கெட் வாங்கினான். இடை வேளையின்போது ஐஸ் கிரீம் வாங்கிச் சாப்பிட்டார்கள். சுருக்கமாகச் சொன்னால் மணிக்குச் சினிமாவுக்குப் போனதுபோலவே இல்லை. ஏதோ வான மண்டலத்துக்குப் போயிருப்பது போல இருந்தது. பால்கனியில் இருப்பவர்கள் எல்லாரும் சந்தடி செய்யாமலும் சந்தோஷமாகவும் இருந்தார்கள். ஆனால் கீழே ஒரே கூச்சலும் நெருக்கடியாகவும் இருந்தது. மேலே இருப்பதற்கும் கீழே இருப்பதற்கும் உள்ள ஏற்றத் தாழ்வு மணியின் மனசில் நன்றாகப் பதிந்துவிட்டது. மணியின் இளம் மனசுக்கு இந்த வித்தியாசமெல்லாம் எதனால் என்பது புரியவில்லை.

படம் முடிந்து அவர்கள் எல்லாருக்கும் முன்னால், சௌகரியமாக, நெருக்கடியில்லாமல் மோட்டாரில் திரும்பினார்கள். ஆனால் வண்டி நேராக மாம்பலத்திலுள்ள முகுந்தனுடைய வீட்டுக்குத் திரும்பியது. மணி ஒன்பதாகிவிட்டது. வண்டியிலிருந்து இறங்கியதும், முகுந்தன் மணியைப் பார்த்து, "சரி; நாழியாகிவிட்டது. நீ உங்க வீட்டுக்குப் போகலாம்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் உள்ளே போய்விட்டான். வண்டியும் ஷெட்டுக்குப் போய்விட்டது. மணிக்கோ அருணஜடையின் பங்களாவுக்கு அங்கிருந்து போக வழி தெரியாது. இவ்வளவு சௌகரியமாகச் சினிமாவுக்கு அழைத்துப்போய் வந்தது கூட அவனுக்குப் பெரிதாகப்பட

வில்லை. கடைசியில் இப்படி வாசலில் நிற்கும்படி முகுந்தன் விட்டுப் போனது அவன் மனசை முறித்து விட்டது. 'வண்டியிலே போகிறவர்களுக்கு நடந்து போகிறவர்களுடைய வருத்தம் தெரியாது போலிருக்கிறது! வருகிற வழியில் அருணஜடையின் பங்களாவின் வழியாக வந்திருக்கக்கூடாதா? இப்பொழுது அநாவசியமாக வழி தெரியாத இடத்துக்கு நடந்து போகும்படி செய்துவிட்டானே! அதுவும் பகல் நேரமாக இருந்தால் பரவாயில்லை. அகாலம் ஆகிவிட்டது. அத்வானமான இடத்தில் தனியாக வேறு போக வேண்டுமே!' என்று மணி தனக்குள் வருத்தப்பட்டுக்கொண்டே நுங்கம்பாக்கத்தை நோக்கி நடந்தான், சட்டைப் பையிலே ஆறு ரூபாய் வேறு அவனைப் பயமுறுத்திக் கொண்டே இருந்தது. எவனாவது கன்னத்தில் ஓர் அறைவிட்டு, பிடுங்கிக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது?

நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொள்ள அன்று எப்படியோ பங்களாவைக் கண்டு பிடிக்க மணி பதினொன்று ஆகிவிட்டது. இனிமேல் எங்கே போவதாக இருந்தாலும் பிறருடைய தயவில் போகக்கூடாது என்று அவன் தீர்மானித்துக்கொண்டான்.

* * *

நாட்கள் ஒவ்வொன்றாகக் கழிந்துகொண்டிருந்தன. பேச்சுத் துணைக்கோ ஆள் இல்லை. விளையாடவோ வசதியில்லை. படிப்பதற்குக் கொஞ்சம்கூட வசதியில்லை. வேளா வேளைக்குச் சாப்பாடும், தூங்குவதற்கு நல்ல இடமும் இருந்துவிட்டால் போதுமா? அருணஜடையும் உமா தேவியும் அவனிடம் சாதாரணமாகத்தான் இருந்தார்கள். அதிகமாக ஒன்றும் கடிந்துகொள்வதில்லை. ஆயினும் அவனிடம் அக்கறையோ பரிவோ காட்டிக் கொள்ளவும் இல்லை. இந்த மாதிரி இடத்தில் எத்தனை நாள் இருப்பது என்று மணிக்குக் கவலையாகவும் வருத்தமாகவும் இருந்தது.

''கொஞ்ச நாள் இருந்து பாரு. அதுக்குள்ளே அவசரப்படறியே!'' என்றான் குப்புசாமி.

''குப்புசாமி சொல்வதுதான் சரி'' என்றான் சந்துருவும்.

இரண்டு பேரும் மாறி மாறி அடிக்கடி வந்து மணியைப் பார்த்துவிட்டுப் போவார்கள். சந்துருவின் உண்மையான நேசத்தையும் நேர்மையையும் கண்டு மணிக்கு அவனிடம் ஒரு மரியாதையே உண்டாகிவிட்டது. முன்பின் தெரியாத ஒரு பையனுக்காக யாராவது இவ்வளவு கவலைப்படுவதுண்டா? யாராவது இவ்வளவு அக்கறையோடு வந்து விசாரிப்பார்களா? எவ்வளவோ துரதிருஷ்டத்தில் சந்துருவும் குப்புசாமியும் தன்னிடம் அக்கறையும் அன்பும் கொண்டிருப்பது ஒரு பெரிய அதிருஷ்டம் என்று தோன்றிற்று மணிக்கு.

ஒரு நாள் மாலை சந்துரு வந்தபோது மணி மிகவும் சோர்ந்த முகத்துடன் இருந்தான். சந்துரு அவனை உற்சாகப்படுத்த எண்ணி, ''மணி! நான் அருணஜடையிடம் அநுமதி வாங்கிக்கொள்கிறேன். நீ என்னுடன் வா!'' என்று அழைத்தான்.

இருவரும் கால்பந்து விளையாடும் மைதானத்தை அடைந்தார்கள். தன் நண்பர்களிடமெல்லாம் மணியைத் தங்கள் வீட்டுப் பையன் என்றே அவன் அறிமுகப்படுத்தி வைத்தான். மணிக்குப் பெருமையாக இருந்தது.

''நீயும் விளையாடு!'' என்றான் சந்துரு.

''எனக்குத் தெரியாதே!'' என்றான் மணி. எல்லாரும் வளர்ந்த பையன்களாக இருப்பதைக் கண்டு அவனுக்கு உள்ளூற அச்சமாக இருந்தது.

''பரவாயில்லை. சும்மா கும்பலோடு கும்பலாக நில்லு! காலுக் கிட்டே பந்து வந்தால் அடி. இல்லாவிட்டால் பேசாமல் இருந்துவிடு!'' என்றான் சந்துரு.

மணி தனக்கு விளையாடத் தெரியாது என்று சொன்னதை மற்றவர்கள் நம்பவில்லை. ஆள் சின்னவனாக இருந்தாலும் ஆட்டத்தில் பெரிய ஆளாக இருப்பான் போலிருக்கிறது என்று எல்லாரும் ஒருமுகமாகக் கருதினார்கள்.

ஆட்டம் ஆரம்பமாயிற்று. முதல் பந்து மணியை நோக்கித்தான் வந்தது. மணி வாட்டமாக இருப்பதற்காகக் கொஞ்சம் பின் வாங்கி முன்னால் பாய்ந்து வந்து ஓங்கி ஒரு 'ரபேட்' கொடுத்தான். 'கும்' என்று எழும்பியது பந்து. எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாரும் எம்பி எம்பிப் பார்த்தார்கள். கோல்கீப்பர்கூடக் குதித்துப் பந்தைப் பிடித்துவிட முயன்றான். ஆனால், பாவம், மயிரிழையில் பந்து அவனை ஏமாற்றிவிட்டு நேராக உள்ளே போய்விட்டது.

'ஹோ ஹோ!' என்று ஒரே கூச்சல் எழுந்தது. மணியின் கட்சிக்காரர்கள் மணியைக் கட்டித் தூக்கிச் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

கட்சி இடம் மாறியது. ஜயித்த கட்சி பந்தை உதைத்தது. பந்து எதிர்க் கட்சிக்குப் போய்விட்டு

மறுபடியும் சோதனையாக மணியிடமே வந்து சேர்ந்தது. மணி பந்தைத் தடுத்து அதை ஒருவருமில்லாத பக்கமாக உருட்டிக்கொண்டு போனான். எதிர்க் கட்சி சமாளித்துத் திரும்ப வருவதற்குள் மணி கோல் கீப்பருக்கு அருகில் போய்விட்டான். ஒரு பக்கம் அடிக்கப் போவதுபோல் பாய்ச்சல் காட்டிவிட்டு, நடுவில் இருந்த பெரிய இடைவெளி வழியாகப் பந்து போகும்படி விண்ணென்று உதைத்தான்!

மறுபடியும் இரண்டாவது கோல்! ஆட்டம் பட்டென்று நொடியில் முடிந்ததைக் கண்டு மணியை எல்லாரும் பிரமிப்போடும் பயத்தோடும் பார்த்தார்கள். மணிக்கோ இவ்வளவும் மிகச் சாதாரணமாக இருந்தது. ரொம்பக் கெட்டிக்காரன் என்று பேர் வாங்கிவிட்டால் அதைக் கடைசிவரையில் மானமாகக் காப்பாற்ற வேண்டாமா? ஏதோ தற்செயலாகக் கிடைத்த இந்த இரண்டு கோல்களையும் அவன் திறமையினால் எடுத்துவிடவில்லை. குருட்டு அதிருஷ்டத்தினால் வந்தவை. அதனால் அவன் பெருமைப்பட்டுக்கொள்ளாமல் தலையைக் குனிந்துகொண்டே அடுத்த ஆட்டத்தில் நின்றான்.

மூன்றாவது ஆட்டத்தின் நடுவில் பந்து எங்கிருந்தோ வந்தது. பந்து வந்ததே அவனுக்குத் தெரியாமல் அவன் தலையில் வந்து விழுந்தது. விழுந்த பந்து கும்மென்று கிளம்பி அவன் கட்சிக் காப்டன் காலருகில் போய் வாட்டமாக விழுந்தது.

''ஒண்டர் புல்! மணி!'' என்று அவன் கட்சிக்காரர்கள் கூவினார்கள். இவ்வளவு பேரையும் தாண்டி, பந்தைத் தன் கட்சிக் காப்டனிடம் போகும்படி அடித்தது ஆட்டத்தில் பெரிய சாதனையான காரியம். மணி அதைத் தெரிந்து அடித்திருந்தால் என்ன ஆகியிருக்குமோ?

''ஏதேது! இந்தப் பையனோடு விளையாட முடியாது போலிருக்கிறதே! அசகாய சூரனாக இருக்கிறானே! எங்கள் கட்சி கட்டாது!'' என்று எதிர்க் கட்சி வாதாட வந்துவிட்டது. சந்துரு இதை ஒப்புக்கொண்டு, மணியை எதிர்க் கட்சிக்கு அனுப்பினான். அங்கே போன பின்னர்தான் என்ன? மணி தன்னுடைய அதிருஷ்டத்தையும் எதிர்க் கட்சிக்கு எடுத்துப் போய் விட்டது போலிருந்தது.

பெரிய பெரிய ஆட்டக்காரர்கள் எல்லாரும் அசந்து போனார்கள். மணி இடது காலாலும் வலது காலாலும் பந்தை உருட்டி, எதிர்க் கட்சியில் ஓடி வந்த அத்தனை பேரையும் எத்திவிட்டு, கோலும் போட்டுவிட்டான். ஆட்டத்தின் சூட்சுமம் அவனுக்கு வசமாகிவிட்டது போலிருந்தது. அன்று அவனை யாராலும் ஜயிக்க முடியாது போலவும் இருந்தது.

''சந்துரு! பையன் ஆடத் தெரியாது என்றானே! இதுதான் ஆடத் தெரியாதவன் ஆட்டமோ? ஆடத் தெரியாததே இப்படி இருந்தால் அப்புறம் ஆடத் தெரியும் என்றால் எப்படி இருக்குமோ?'' என்றான் எதிர்க் கட்சிக் காப்டன்.

சந்துருவுக்கு அது உண்மையில் மகா பெருமையாக இருந்தது. வீடு திரும்பும்போது, ''மணி! நீ ஆட்டத்தில் இவ்வளவு கெட்டிக்காரன் என்பது எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் உன்னைத் தினமும் கூட்டிக்கொண்டு போயிருப்பேனே!'' என்றான்.

மணி இதற்குச் சிரித்துவிட்டு ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டான்.

பங்களா வாசலில் அருணஜடை உட்கார்ந்திருந்தார். சந்துருவைக் கண்டதும் அவர், ''வாப்பா சந்துரு! உன் சிநேகிதனை அனுப்பிச்சுடப் போறேன். எங்களுக்குப் பழைய பையன் வந்துட்டான். அதனாலே அவனை மாம்பலத்துக்கு அனுப்பிடப் போறேன்!'' என்றார். மணிக்கும் சந்துருவுக்கும் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் என்னவோ போலிருந்தது. என்ன இதற்குப் பதில் சொல்வதென்றே தெரியாமல் இருவரும் ஒருவரை ஒருவர் காரணம் புரியாமல் பார்த்து விழித்தார்கள்.

(தொடரும்)

வ. ஆ

71. வி. ஜி. ரமணி, ஆரணி.
72. ராஜசேகரன், ஆம்பூர்.
73. நா. பாலசுப்பிரமணியன், குயப்பேட்டை, வேலூர்

தெ. ஆ.

74. பூ. நற்குணாநந்தன், சிதம்பரம்.
75. வே. சிவமணி, ஸ்ரீமுஷ்ணம்.

தஞ்சை

76. எம். ஆர், சுப்பிரமணியன். ஆக்கூர்.
77. கே. ரங்கநாதன், கும்பகோணம்.
78. எஸ். சம்பத் குமாரன். குடவாசல்.
79. கே. பத்மநாபன், தஞ்சை.

திருச்சி

80. கே. ராஜு, மேலப்புதூர்.
81. வி. ஜி. ராமசந்திரன், தென்னூர்.
82. பெ. நடராஜன், பெரம்பலூர்.
83. ஜி. அருணாசலம், துறையூர்.
84. எம். எஸ். சுவாமிநாதன், புதுக்கோட்டை.

மதுரை

85. மு. வேங்கடராமன், நத்தம்.
86. எஸ். முத்துரங்கன், மதுரை.

ராமநாதபுரம்

87. பி. பாக்கியம், சத்திரபதி.

கோயம்புத்தூர்

88. கே. வேங்கடசாமி, கோட்டூர்.

சேலம்

89. என். சிவஞானம், செவ்வாய்ப் பேட்டை.
90. மா. க. ராமு, மேட்டூர் அணை.

வெளி ராஜ்யம்

91. டி. வி. ஸ்ரீதர், பெங்களூர் ஸிடி.
92. என். சுப்பிரமணியன், ஹாஸ்பேட், பெல்லாரி ஜில்லா.
93. பி. ராமசந்திரன், புதுடில்லி.

இலங்கை

94. இரா. சந்திரசேகரன், நாவலப்பிட்டி.
95. பி. பி. சுந்தர ராஜா, கண்டி.
96. ஆர். எஸ். கிருஷ்ணமூர்த்தி, யாழ்ப்பாணம்.
97. கே. வி. எஸ். மோசன், கொழும்பு-13.
98. பி. முரசு. புத்தளம்.
99. பா. சிவராமகிருஷ்ணன், சிலாபம்.
100. சி. வ. இரத்தின சிங்கம், சாவகச்சேரி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4,
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன்

அதிருஷ்ட எண்கள் விளக்கம்

இதோ பக்கத்தில் ஒரு தொடர் எண் (Serial number) அச்சிடப்பட்டிருக்கிறது; இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். இந்த இதழுக்குரிய அதிருஷ்ட எண்கள் 1-9-55-ம் தேதி இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கத்தில் வெளியாகும். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

பரிசு விவரம்

முதல் பரிசு	ரூ.	15/-
இரண்டாம் பரிசு	ரூ.	10/-
மூன்றும் பரிசு (மூன்று பேர்களுக்குத் தலா)	ரூ.	5/-வீதம்
நாலாம் பரிசு (ஐந்து பேர்களுக்குத் தலா)	ரூ.	2/-வீதம்
மொத்தம் பத்துப் பரிசுகளுக்கு	ரூ.	50/-

உங்கள் கண்ணன் இதழைப் பத்திரமாக வைத்திருங்கள்

கண்ணன் காரியாலயம், மயிலாப்பூர்

பேறு நண்பர்கள்

1. D. கோவிந்தராஜன், 16. சிங்காரத் தோப்புத் தெரு, மதுரை.

2. R. பாலகிருஷ்ணன், 106/6. ரேஞ்சு ஹில்ஸ், கர்க்கி, புனா -3.

3. K. ராஜமாணிக்கம், S/o S. N. குப்புசாமி பக்தர், க. புதூர், இடைப்பாடி போஸ்டு, சேலம் ஜில்லா.

4. S. R. கிருஷ்ணமூர்த்தி, S/o K. V. ராகவன் B. A., இம்பீரியல் பாங்க், நாமக்கல்.

5. N. A. பாலகிருஷ்ணன், 11, ஹனுமந்தச் செட்டி 3-வது தெரு, ராசிபுரம்.

6. அழகனூர், மாச்சம்பாளையம், சுந்தராபுரம், கோவை ஜில்லா.

7. N. விசுவநாதன், 10, லஜபதிராய் ரோடு, தல்லாகுளம், மதுரை ஜில்லா.

8. T. அப்துல் ஜானி, எடிகா ரோடு, ஆம்பூர்.

9. B. நாராயணசாமி, 3729/2. தெற்கு 4-ஆவது வீதி, புதுக்கோட்டை.

10. மு. முகம்மது பாரூக், C/o P. M. M. சையது அகமது & கோ, 89, கொழும்பு வீதி, கண்டி.

(Regd. as a News paper in Ceylon.) Reg. No. M. 5542

விற்பனையாகின்றன!

கருத்தைக் கவரும்

இரு கண்ணன் வெளியீடுகள்

★ **அசட்டுப் பிச்சு - ஆசிரியர்: ஆர்வி** விலை ரூ. 1

ஏ. பி. என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சும... என்பவனைத்தான் குறிக்கும். ஆனால் ஏ - என்றால் அசடு. பி - என்... பிச்சு என்று ஆகி, மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்... பிச்சுவாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பேச்... இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்தம்! ஆனால்,—அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட்டும் யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால், ஸ்ரீகாந்த், புலிக்குட்டி குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு பெரிய புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்லாம் அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்துவிடுகிறான். காணாமல் போன பெண், அகப்படாத பக்காத் திருடன் இவர்களையெல்லாம் பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு இன்ஸ்பெக்டர் குருப்பின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமானத்துக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகிவிடுகிறான். அருமையான சம்பாஷணைகள்; அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான கதைப் போக்கு; அழகான படங்கள் - எல்லாம் நிறைந்த இனிய புத்தகம் அசட்டுப் பிச்சு. 128 பக்கள். நல்ல காகிதம்.

★ **ஜம்பு - ஆசிரியர்: ஆர்வி** விலை அணா 8.

கண்ணன் வெளியீடுகளிலே பலவகையான புத்தகங்கள் உண்டு. பழங்காலத்துக் கட்டுக் கதைகள் உண்டு; அறிவும் நீதியும் புகட்டும் தந்திரக் கதைகள் உண்டு; சரித்திரக் கதைகள் உண்டு; விஞ்ஞான விந்தைகளையும் பெரியோர்களின் பாலியப் பருவத்து நிகழ்ச்சிகளையும் கதைபோலச் சொல்லும் கட்டுரைகள் உண்டு; சித்திரங்கள் உண்டு, சித்திரக் கதைகளும் உண்டு. அவற்றிலே இந்த ஜம்பு இந்தக் காலத்துக் கதை. இதிலே கப்பல் வருகிறது; சர்க்கஸ் குரங்கு வருகிறது; சிங்கமும் புலிகளும் வருகின்றன; அவற்றை ஆட்டி வைப்பவ... வருகிறான். இன்ஸ்பெக்டர் வருகிறார். மோட்டாரும் மோட்ட... படகும் வருகின்றன. ரகசியக் கடிதம்கூட ஒன்று ஜம்புவுடம் ... அகப்பட்டுக்கொள்கிறது. அதிலிருந்துதான் திகைப்பையும் வியப்... தருகிற இந்த அருமையான கதை தொடங்குகிறது. நடுநடுவே அ... படங்கள் இருக்கின்றன.

கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு
தபால் செலவு தனி.

விவரங்களுக்கு:

கலைமகள் காரியாலயம் : : மயிலாப்பூர், சென்னை-4